Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 276

திங்கட்கிழமை
29 ஒகஸ்ட் 2022

ஆவணி 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50



முச்சந்தி முரளி

"தலையிடியும்
காய்ச்சலும்
தங்களுக்குப்
வரேக்கதான்
சிங்களவருக்கு
எங்கட வலி
தெரியுது
கண்டியளோ"

## வாழ்வக மாணவி மாவட்டத்தில் முதலிடம்

யாழ்ப்பாணம், ஓக. 29

விழிப்புலனற்றவருக்கு வழிகாட்டியாக மிளிரும் வாழ்வகம் நிறுவனத்தின் மாணவியான உசா கேசவன் கலைப்பிரிவில் மாவட்டத்தில் முதலிடத்தையும் அகில இலங்கை ரீதியில் 22ஆம் இடத்தையும் பெற்றுள்ளார். 11 ➤

உயிரியல் பிரிவில்

## தமிழ் மாணவன் தேசிய ரீதியில் முதலிடம்

கொழும்பு, ஓக. 29

நேற்று வெளியான உயர்தரப் பெறுபேறுகளின்படி, மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி மாணவன் தமிழ்வாணன் துவாரகேஸ் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (அ-ஒ-இ)

## வெளியானது உ/த பெறுபேறு; பல்கலைக்கு 62 வீதமானோர் தகுதி

கொழும்பு, ஓக. 29

2021 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று பிற்பகல் வெளியிடப்பட்டன.

இந்த வருட உயர்தரப் பரீட்சைக்கு 2 லட்சத்து 36 ஆயிரத்து 35 பாடசாலை விண்ணப்பதாரர்களும் 36 ஆயிரத்து 647 தனியார் விண்ணப்பதாரர்களும் தோற்றியதாகவும் மொத்தமாக 2 லட்சத்து 72 ஆயிரத்து 682 விண்ணப்பதாரர்கள் 3 11 ➤





சிறிலங்கா அரசாங்கத்துக்கு எதிராக

# சிங்களவர்கள் ஜெனிவாவில் முதன்முறையாகப் போராட்டம்

**ஜெனிவா, ஒகஸ்ட் 29**

**சிறிலங்கா அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராகவும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வலியுறுத்தியும் ஜெனிவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவை வளாகத்தில் ஐரோப்பாவைச் சேர்ந்த சிங்களவர்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.** 11 ➤

கொழும்பு அரசு முட்டுக்கட்டை

## யாழ். மாநகரசபைக்கு வழங்கிய பணத்தை மீளக்கோரும் ஜப்பான்

யாழ்ப்பாணம், ஓக. 29

யாழ். மாநகரசபைக்கு ஜப்பான் அரசாங்கம் இலவசமாக வழங்கிய 4 கழிவகற்றும் பாரவூர்திகளை நாட்டுக்கு கொண்டுவரும் திட்டத்துக்கு கோத்தாபய அரசாங்கம் ஏற்படுத்திய தடைகளால், பாராவூர்திகளை நாட்டுக்கு கொண்டுவர மாநகரசபைக்கு ஜப்பான் தூதரகம் வழங்கிய ரூ. 14.3 11 ➤



## துர்க்கை அம்மன் பெருந்திருவிழா நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 29

வரலாற்றுச் சிறப்பு மிக்க தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று 11 ➤

## இலங்கைக்கு எதிராக இப்போது ஏன் தீர்மானம்?

இப்படிக் கேட்கிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஓக. 29

இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள வேண்டுமானால் சர்வதேச நாடுகள் உதவிகளைச் செய்யவேண்டும். இவ்வாறான நெருக்கடி நேரத்தில் இலங்கைக்கு எதிரான ஏன் மற்றுமொரு பிரேரணையை முன்வைக்கவேண்டும்? என்று கேள்வி எழுப்பி 11 ➤

நீண்ட நாள்களாக தேடப்பட்ட

## ஹெரோயின் வியாபாரி கைது

யாழ்ப்பாணம், ஓக. 29

யாழ்ப்பாணத்தில்ஹெரோயின்போதைப்பொருளை விற்பனை செய்து வந்தார் என தேடப்பட்டு வந்த 27 11 ➤

## கோதுமை மாவின் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 29

சந்தையில் ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 350 ரூபாவாக அதிகரித்துள்ளதாக அகில இலங்கை 11 ➤

## எந்தப் பிரேரணை வந்தாலும் இலங்கைக்கு சவால் இல்லை

பிரதமர் தினேஷ் உறுதி

கொழும்பு, ஓக. 29

ஜெனிவா அமர்வில் இலங்கைக்கு எதிராக எத்தகைய பிரேரணைகள் வந்தாலும் அது சவாலாக அமை 11 ➤

## உருப்படியாக எதையும் செய்யாத இலங்கைக்கு மீண்டும் காலநீடிப்பு

பிரிட்டனால் ஜெனிவா அமர்வில்

கொழும்பு, ஓக. 29

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களிலிருந்து ஒருதலைப் பட்சமாக விலகி, 11 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனக்கப்பலின் வருகையின் பின் பூகோள அரசியலில் கொதிநிலை

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சுட்டிக்காட்டு



**யாழ்ப்பாணம், ஓக. 29**

**சீனாவின் உளவுக் கப்பலின் வருகையோடு பூகோள அரசியல் கொதிநிலைக்குச் சென்றுள்ளது. இந்தக் கொதிநிலையும் இவ்வாறான நெருக்குதல்களும் இத்தோடு முடிந்து விடப்போவதுமில்லை என்று தெரிவித்துள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈ.சரவணபவன்.**

அமிர்தலிங்கத்தின் 95ஆவது பிறந்த தின நினைவு நிகழ்வு வலி.மேற்குப் பிரதேசசபையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது தலைமை உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைத் தமிழர்களுக்குக் கிடைத்த ஆளுமைகளில் தனித்துவமானவர் அமிர்தலிங்கம். இந்தத் தீவில் தமிழர்களின் தனி நாட்டுக்கான போராட்டத்துக்கு விதை போட்டவர்களில் அவரும் ஒருவர். இந்தவிடயம் தொடர்பில் பல விமர்சனங்கள் இருக்கலாம். ஆனால், தனிநாட்டுக்கான தமிழ் மக்களின் ஆணை, அமிர்தலிங்கத்தால்தான் கிடைக்கப்பெற்றது என்பதை மறுதலிக்க முடியாது. தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும், வன்னியில் நடத்திய சர்வதேச செய்தியாளர் மாநாட்டில் அதை உறுதிப்படுத்தும் விதமாக கருத்துத் தெரிவித்திருந்தார்.

இந்த இலங்கைத் தீவைச் சுற்றி நடக்கின்ற பூகோள அரசியலைப் புரிந்து கொண்டு அதற்கு ஏற்ப காய்களை நகர்த்திய ஒரு மகத்தான இராஜதந்திரியாகவும் அமிர்தலிங்கத்தைச் சொல்ல முடியும். இன்று பலர் பூகோள அரசியல், இராஜதந்திரம் என்று கூறிக்கொண்டு எமது மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில், இந்தியாவின் பங்கைப் புரிந்துகொண்டு, சிங்கள தேசத்தவரின் சடுகுடு ஆட்டத்தைக் கணித்து அதற்கு ஏற்ப தமிழர்களின் விடயத்தில் அவர் சாதித்துக்காட்டினார். அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அம்மையாரை மற்றும் முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய் ஆகியோரை நேரில் சந்தித்துப் பேசி, ஈழத்தமிழர்களுக்குச் சார்பான நிலைப்பாட்டை இந்தியாவை எடுக்கவைப்பதில் கனதியான பங்காற்றியவர் அமிர்தலிங்கம்.

ஆனால், அதன் பின்னரான சூழலில் இந்தியா, ஈழத் தமிழ் மக்களை பகடைக்காய் ஆக்க முயன்றபோது அதை எதிர்த்துக் குரல் கொடுத்தவரும் அவர்தான். இந்திய. - இலங்கை ஒப்பந்தத்தின் போதாமைகளைப்பற்றியும், அதன் ஊடாக ஈழத்தமிழர்கள் எவ்வாறு ஏமாற்றப்பட்டுள்ளனர் என்பது பற்றியும், அன்றைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு கடிதம் அனுப்புவதற்கும் அமிர்தலிங்கமே தலைமை தாங்கினார்.

ஆயுதப் போராட்டக்காலம் முடிவுக்கு வந்த பின்னர், தமிழர்களுக்கு என்று வெளிவிவகாரக் கொள்கை இருக்கின்றதா என்று கேட்கும் அளவுக்கு நிலைமைகள் படுமோசமாகவே உள்ளன.

தற்போது வல்லாதிக்க வல்லூறுகளுக்கு இலங்கை என்ற தீவு இரையாகிக் கொண்டிருக்கின்றது. சீனாவின் உளவுக் கப்பலின் வருகையோடு அந்தப் பூகோள அரசியல் கொதிநிலைக்குச் சென்றுள்ளது. இந்தக் கொதிநிலையும் இவ்வாறான நெருக்குதல்களும் இத்தோடு முடிந்துவிடப்போவதுமில்லை.

எம்மைச் சுற்றி நடக்கின்ற இந்த விடயங்களை எப்படி நாம் கையாளப்போகின்றோம்? தனித்துவமான இனமாக இந்தத் தீவில் வாழ்வதற்குத் துடிக்கும் நாங்கள் அதற்காக என்ன செய்யப் போகின்றோம் என்ற திடமான வழிவரைபடம் கூட இல்லாமல், எல்லாவற்றுக்கும் இழுத்த இழுப்பாகச் சென்று கொண்டிருக்கின்றோம். ஈழத் தமிழர்களின் வெளிவிவகாரக் கொள்கை என்பது தனிமனிதர்கள் சிலரின் கொள்கையாக மாற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றது. அன்று அமிர்தலிங்கம் போன்றோர் தூரநோக்கோடும் தீர்க்க தரிசனத்தோடும் விடயங்களைக் கையாண்டனர். ஆனால், இன்று, தத்தமது தனிப்பட்ட நலன்களை உறுதிப்படுத்திக்கொள்ளும் வகையில் வெளிவிவகாரத்தைக் கையாண்டு, ஈழத் தமிழர்களைத் தொடர்ந்தும் தத்தளிக்க வைத்துக்கொண்டிருக்கின்றனர்.

ஈழத் தமிழினம் கரைசேராமல் இருப்பதற்கு இதுவும் பிரதான காரணம். இந்தியா போன்றதொரு வல்லரசு எமது விடயத்தில் கரிசனை காண்பிக்கும்போது அதற்கு நாம் செங்கம்பளம் விரித்திருக்க வேண்டும். அதைவிடுத்து, பாரததேசம் நொந்து கொள்ளும் அளவுக்கு எமது செயற்பாடுகள் அமைந்துவிடக்கூடாது. அவர்கள் எம்மைப் பேச்சுக்கு அழைக்கும் போது அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்வதே புத்திசாலித்தனம்.

இந்தியாவின் பாதுகாப்புத் தொடர்பில் ஈழத் தமிழர்களை மையமாகக் கொண்ட கட்சிகள் எல்லாவற்றுக்கும் பொதுவான ஒரு நிலைப்பாடே இழையோடுகின்றது. அதாவது, ஈழத் தமிழர்கள் இந்தியாவின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்துகொள்ளமாட்டார்கள் என்ற உறுதியை அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் வழங்கி நிற்கின்றன என்பதற்கும் அப்பால் அதுதான் உண்மை. ஈழத்தமிழர்கள் விடயம் இந்தியாவைத் தாண்டி நகராது என்பதை உணர்ந்தமையாலேயே தமிழ்க் கட்சிகள் இந்த விடயத்திலாவது ஒன்றுபட்டு நிற்கின்றன. ஆனாலும், தமிழர்களின் வெளிவிவகாரத்தைக் கையாளும் ஒரு சில நபர்கள், இந்த யதார்த்தத்தைப் புரியாது செயற்படுவது என்பது எமது தலையில் நாமே மண் அள்ளிப்போடுவதைப்போன்றது - என்றார். (அ)



## அத்துமீறி வீட்டுக்குள் நுழைந்து தாக்குதல்

### மானிப்பாயில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 29

வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து இனந்தெரியாத கும்பல் தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளது. இந்தச் சம்பவம் மானிப்பாயில் நேற்று அதிகாலை 2 மணியளவில் நடந்துள்ளது.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதியில் அமைந்துள்ள வீடொன்றுக்குள் அத்துமீறி வாள்களுடன் உள்நுழைந்த மூவரடங்கிய கும்பல், வீட்டின் ஜன்னல்கள் மற்றும் கதவுகளை உடைத்ததுடன், அங்கு பெற்றோல் குண்டு வீசியும் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால் மோட்டார் சைக்கிள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய சம்பவ இடத்துக்குச் சென்ற மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (எ-14-27,125)

## இந்திய மீனவர்கள் ஆறு பேர் கைது

கொழும்பு, ஓக.29

தலைமன்னார் கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று இலங்கைக் கடற்படையினர் தெரிவித்தனர். இந்திய மீனவர்களின் இழுவைப் படகு ஒன்றும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு, தலைமன்னார் கடற்பரப்பில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த வடமத்திய கடற்படைக் கட்டளைப் பிரிவினர் இந்திய மீனவர்களைக் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் சட்ட நடவடிக்கைகளுக்காக கடற்றொழில் நீரியல் வளத் துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## போதைப்பொருளுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 29

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்டத்தரிப்புப் பகுதியில் 430 மில்லிகிராம் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார் என்று நேற்றுமுன்தினம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த இளைஞரை வழிமறித்து சோதனையிட்டபோது, இளைஞரிடம் இருந்து 430 மில்லிகிராம் போதைப்பொருள் மீட்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த 21 வயதான இளைஞரே கைதுசெய்யப்பட்டுள்ளார். (எ-14,125)

## காணிப்பிரச்சினை தொடர்பில் மன்னாரில் கலந்துரையாடல்

மன்னார், ஓக. 29

மன்னார் மாவட்டத்துக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் காணிகள் தொடர்பான பிரச்சினைகளை ஆராயும் விசேட கலந்துரையாடல் ஒன்று மன்னார் மாவட்டச்செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. மன்னார் அபிவிருத்தி குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் தலைமையில் காணி அமைச்சின் செயலாளரின் பங்குபற்றலுடன் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் மன்னார் மாவட்டத்தில் பிரதேச ரீதியாகக் காணப்படும் காணிப் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

மாந்தை மற்றும் நானாட்டான்- மடுப் பகுதியில் மக்கள் பாவனையில் காணப்படும் காணிகள் பிரதேச செயலர்களின் ஆலோசனை இல்லாமல் வனஜீவராசிகள் திணைக்களத்தின்கீழ் வர்த்தமானி அறிவித்தல் ஊடாகக் கொண்டு வரப்பட்டுள்ளமையால் பல்வேறு நிர்வாகச் சிக்கல்கள் எழுந்துள்ளமை தொடர்பிலும் காணி அமைச்சின் செயலாளருக்குத் தெரிவிக்கப்பட்டது.

இந்த காணிகளில் வசிக்கும் மக்கள் நீண்டநாள்களாக காணி ஆவணங்கள் கிடைக்காமல் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. காணி ஆவணங்கள் பெறுதல் உள்ளிட்ட பிரச்சினைகளை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று காணி அமைச்சின் செயலாளர் அங்கு தெரிவித்தார். கலந்துரையாடலில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவர், வடமாகாண காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர், மன்னார் மாவட்டச் செயலர், பிரதேச செயலர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர். (எ-14,213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# காலமும் நீதிக்கான குரலும்

காலம் மிக விசித்திரமானது. எல்லாவற்றையும் கண்மூடித் திறப்பதற்கிடையில் தலைகீழாகப் புரட்டிப்போட்டுவிடும் வல்லமை காலத்துக்கு மட்டுமேயுண்டு. அப்படித்தான் இப்போதும், ஜெனிவாவில் ஒரு விசித்திரத்தை காலம் நிகழ்த்திக் காட்டியிருக்கிறது. இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக, சிங்கள மக்கள் ஜெனிவாவில் பெருமளவில் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். இந்த ஆர்ப்பாட்டம் தான், காலத்தின் தலைகீழ்க் கோலத்துக்குச் சான்றாக மாறியுள்ளது.

சுவிற்ஸர்லாந்தின் மிக முக்கியமான நகரம் என்பதையும் தாண்டி , ஜெனிவா என்றாலே நமக்கு உடனே நினைவுக்கு வருவது அங்கு ஒவ்வொரு பருவத்தின் போதும் தொடராக நடைபெறும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகள்தான். இந்த மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகள் தான், எல்லாவற்றையும் இழந்துபோய், விடுதலைப் போராட்டத்தில் வஞ்சகமாகத் தோற்கடிக்கப்பட்டு, பல்லாயிரக்கணக்கானோரைப் பலி கொடுத்து ஏதிலிகளாக நின்ற தமிழினத்துக்கு ஒரேயொரு நம்பிக்கை மனித உரிமைகள் பேரவையில் எமக்கான நீதியைப் பெற்றுக்கொள்வதென்பது, கல்லிலே நார் உரிப்பதைவிடவும் கடினமானதுதான். ஆனாலும், எல்லா வாசல்களும் அடைக்கப்பட்டுவிட, நமக்கிருந்த ஒரேயொரு வழி மனித உரிமைகள் பேரவை அமர்வுகளே. இதனைவிட்டால் வேறு மார்க்கம் இல்லையென்ற நிலையில், ஏமாற்றங்களே பரிசாகக் கிடைக்குமென்று தெரிந்திருந்தபோதும், நீதிக்கான தமிழினத்தின் முயற்சிகள் தொடர்ந்தன.

ஒவ்வொரு பருவ காலத்தின்போதும், ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவை அமர்வுகள் நடைபெறும் காலப்பகுதியில், அந்த அமர்வுகளில் கலந்துகொள்ளும் நாடுகளின் பிரதிநிதிகளின் கவனத்தைக் கோரும் வகையில் ஆர்ப்பாட்டங்கள், நடைபவனிகள், சைக்கிளோட்ட விழிப்புணர்வுகள், இனவழிப்பு ஆதாரங்களை வெளிப்படுத்தும் புகைப்படக் கண்காட்சிகள் என்று புலம்பெயர் தமிழ்மக்கள் எல்லாவகையான ஜனநாயகப் போராட்டங்களையும் நடத்தினர். அப்போதெல்லாம், மனிதாபிமான ரீதியில் கூட எங்கள் நீதிக்கான குரலைக் கேட்க புலம்பெயர்நாடுகளில் வசித்த சிங்களமக்கள் விரும்பவில்லை. மாறாக தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டங்களை எப்படியெல்லாம் சிதைக்கமுடியுமோ அப்படியெல்லாம் செயற்பட்டு, தங்கள் பேரினவாத விசுவாசத்தைக் காட்டினர். நீதிகோரி ஆர்ப்பாட்டம் செய்த தமிழ்மக்களுக்கு போட்டியாக அதே இடத்தில் அரசாங்கத்துக்கு ஆதரவாக சிங்கள மக்களும் பேரணிகளை நடத்தினர். தமிழர்களின் துண்டுப்பிரசுரங்களைப் பிடுங்கியெறிந்து வீசினர். தமது இயல்புவாழ்வை தமிழர்களின் ஆர்ப்பாட்டங்கள் குழப்புவதாக பொலிஸில் முறைப்பாடு செய்து அவற்றுக்கு தடைபோட வழிவகுத்தனர். தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையில் வார்த்தைகளை தெறிக்கவிட்டனர்.

இப்படியெல்லாம் ஜெனிவா உள்ளிட்ட புலம்பெயர்நாடுகளின் நகரங்களில் எல்லாம் இலங்கை அரசாங்கத்துக்கு எந்தச் சிங்கள மக்கள் காவடி தூக்கி ஆடினார்களோ, அதே சிங்கள மக்களை அதே பேரினவாத அரசாங்கத்துக்கு எதிராக ஜெனிவா வீதிகளில் இறக்கி ஆர்ப்பாட்டம் செய்யவிட்டிருக்கிறது காலம். முன்னைய காலங்களில் இலங்கை அரசாங்கம் மீது என்னென்ன குற்றச்சாட்டுக்களை தமிழ் மக்கள் சுமத்தினார்களோ, கிட்டத்தட்ட அதேவகையிலான குற்றச்சாட்டுக்களையே சிங்கள மக்களும் முன்வைத்து தம் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பெயரால் ஜனநாயகப் போராட்டக்காரர்கள் வேட்டையாடப்படுதல், கருத்துச் சுதந்திரத்துக்கு தடை, ஊழல்வாத அரசியல்வாதிகளுக்கே மீண்டும் ஆட்சியில் இடமளிப்பு , மக்களின் குரலை அரசாங்கம் செவிமடுக்க மறுக்கின்றமை என்ற விடயங்களை ஜெனிவாவில் கூடிய சிங்கள மக்கள் உரத்துச் சொல்லியிருக்கின்றனர். இதே பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பெயரால் பிடிக்கப்பட்ட தமிழ் அரசியல்கைதிகள் தான் இன்னமும் வெளிவர முடியாதபடி தசாப்தக்கணக்கில் சிறைகளில் வாடுகின்றனர், இதே பேரின அரசின் உண்மைமுகத்தை வெளிக்கொணர்ந்தபடியால் தான் தமிழ் ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டனர், காணாமலாக்கப்பட்டனர், கொல்லப்பட்டனர்; உதயன் உள்ளிட்ட ஊடகங்களும் கூலிப்படைகளால் தாக்கப்பட்டன . தமிழ் மக்களின் சுயநிர்ணயக்கோரிக்கையை செவிசாய்க்காமல் பெரும் போரை நடத்தி லட்சக்கணக்கான மக்களை சிங்கள அரசு கொன்று குவித்தது. இவற்றுக்கு எதிராகத்தானே தமிழ் மக்கள் ஜெனிவா உள்ளிட்ட நகரங்களில் நீதிகேட்டார்கள். அப்போதெல்லாம் அதைக் குழப்பியவர்கள், இப்போது அதே சிங்கள அரசாங்கம் தங்கள் மீதும் பாயத்தொடங்கியபோதுதான் பதறியடித்துக்கொண்டு ஜெனிவாவில் நீதி கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள். இப்போதும் ஒன்றும் கெட்டுப்போய்விடவில்லை, எங்களுக்காகவும் நீங்கள் நீதியைக் கேட்டால், [illegible] நீதிக்கும் எம் புலம்பெயரிகள் துணைநிற்பார்கள். [illegible] இந்த நீதிக்காக குரல்கொடுப்பதிலாவது ஒன்றுபடுங்கள்.

நாளொரு நல்வார்த்தை

"அமைதியை விட உயர்வான சந்தோசம் இந்தப் பூமியில் வேறு ஒன்றும் இல்லை"
- புத்தர்




# இலங்கை விவகாரத்தால் முட்டிமோதும் வல்லரசுகள்

கொழும்பு, ஓக.29

**தற்போதைய சூழ்நிலையில் இலங்கைக்கு ஆதரவு தேவை. அதைத் தவிர வேறொரு நாட்டின் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் தேவையற்ற அழுத்தங்கள் அல்லது தேவையற்ற சர்ச்சைகள் அவசியமற்றவை என்று இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.**

இலங்கைக்கான சீனத் தூதுவர், அண்மையில் வெளியிட்ட கருத்துக்களுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே இலங்கைக்கான இந்தியத் தூதரகம் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக தூதரகத்தின் ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சீனத் தூதரின் கருத்துக்களை நாங்கள் கவனித்தோம். அந்தக் கருத்துக்கள் அவரது அடிப்படை இராஜதந்திர ஆசாரங்களை மீறும் தனிப்பட்ட பண்பாகவும் இருக்கலாம் அல்லது ஒரு பெரிய தேசிய அணுகுமுறையின் பிரதிபலிப்பாகவும் இருக்கலாம்.

இலங்கையின் அண்டை நாடு பற்றிய அவரது பார்வையானது, அவரது சொந்த நாடு எவ்வாறு நடந்துகொள்கிறது என்பதன் அடிப்படையில் இருக்கலாம். ஆயினும் இந்தியா மிகவும் வித்தியாசமானது என்று நாங்கள் உறுதியளிக்கிறோம்.

ஒளிவுமறைவு மற்றும் கடன் உந்துதல் நிகழ்ச்சி நிரலே இப்போது இலங்கைக்கு ஒரு பெரிய சவாலாக உள்ளது. இது சிறிய நாடுகளின் முன்னேற்றங்களுக்கு ஒரு எச்சரிக்கையாகும். தற்போது இலங்கைக்கு ஆதரவு தேவை. வேறொரு நாட்டின் நிகழ்ச்சி நிரலுக்கு சேவை செய்வது அல்ல. தேவையற்ற அழுத்தங்கள் அல்லது தேவையற்ற சர்ச்சைகள் அவசியமற்றவை என்று அந்தப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## 13 மில். ரூபாவுக்கு 'தண்ணி' காட்டும் எம்.பிக்கள்

கொழும்பு, ஓக. 29

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 60 பேர் வரையிலானோர் இதுவரை நீர்க்கட்டணம் செலுத்தவில்லை என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை பொது நிர்வாக அமைச்சின் ஊடாக சபாநாயகருக்கு சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்காக அவர்கள் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபைக்கு ஒரு கோடியே 30 லட்சம் ரூபா செலுத்தவேண்டியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதி பொது நிர்வாக அமைச்சின் செயலாளருக்குத் தெரியப்படுத்தியிருந்தது.

அதேவேளை, வீட்டு வாடகை, மின் மற்றும் குடிதண்ணீர்க்கட்டணங்களைச் செலுத்தத் தவறியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து நிலுவைத் தொகையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே.மாயாதுன்னே கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். நீர், மின்சாரக் கட்டணம் மற்றும் வீட்டு வாடகை செலுத்துவதில் தவறிழைத்த அமைச்சர்கள் தொடர்பில் நாடாளுமன்றக் குழுக்களின் ஊடாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை
30.08.2022
செவ்வாய்க்கிழமை
ஆவணி 14
சுபநேரம் : 10.35 -12.05
ராகுகாலம்: 03.05 - 04.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். வாசியின் கடவுச்சீட்டில் இலங்கைக்குள் வரமுயன்ற பங்களாதேஷ் பிரஜை கைது!

கொழும்பு, ஓக. 29
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரின் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இலங்கைக்குள் பிரவேசிக்க முயன்ற பங்களாதேஷ் நாட்டவர் நேற்றுமுன்தினம் காலை குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளால் நாடு கடத்தப்பட்டுள்ளார்.
45 வயதான சந்தேகநபர் குவைத்திலிருந்து கொழும்பு வந்த விமானத்தில் நாட்டுக்கு வந்தார். சந்தேகநபர், போலிப் புகைப்படத்துடன் கூடிய இலங்கைக் கடவுச்சீட்டை சமர்ப்பித்தபோதும், அது போலியானது என அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டது.
குவைத்தில் உள்ள பங்களாதேஷ் தூதரகம் வழங்கிய அடையாளச் சான்றிதழை அவரது பொதிகளில் அதிகாரிகள் கண்டுபிடித்தனர். குவைத்தில் உள்ள தரகர் ஒருவர் ஊடாக இலங்கைக் கடவுச்சீட்டை பங்களாதேஷ் பிரஜை பெற்றுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

(அ-ஒ-இ)


## வேலைக்கு பெண் தேவை

மருதனார்மடத்தில் இயங்கும் ஆடையகத்துக்கு பணிபுரிய பெண் தேவை. சம்பளம் நேரில் பேசலாம்.
(மருதனார் மடச் சந்திக்கு அருகாமை விரும்பத்தக்கது)

**076 056 7451**


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
### ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



கடந்த 31.07.2022 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த
எமது குடும்பத்தலைவி

**அமரர் திருமதி தேவபதி (திலகவதி) சிவசுப்பிரமணியம்**

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் நாளை (30.08.2022) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் கே.கே.எஸ். வீதியிலமைந்துள்ள வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் (நாச்சிமார் கோவில்) திருமணமண்டபத்தில் நடைபெறவுள்ளதால் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

24/4 சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை.
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
021 221 9206

# பனுவல் வெளியீடும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஓக. 29
நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல் நடத்திய பனுவல் வெளியீடும் பரி சளிப்பு நிகழ்வும் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
நிகழ்வில் பனுவல் வெளியீடு, பனுவல் திறனாய்வு என்பன இடம்பெற்று அதனைத் தொடர்ந்து பரிசில்கள் வழங்கப்பட்டன.
நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூட இணைத்தலைவர் இ.இளங்கோவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் முத்துஇராதாகிருஷ்ணன் கலந்துகொண்டார்.


(எ-14-27)



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

பிறப்பு 14 . 10 . 1947



இறப்பு 28 . 08 . 2022

**ஐயாத்துரை பஞ்சாட்சரம் (ரிங்கர்-பஞ்சர்)**

துவாரகை வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை பஞ்சாட்சரம் அவர்கள் 28.08.2022 அன்று இறைபதமடைந்தார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.08.2022 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று கோண்டாவில் கலைவாணி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

075 326 8725

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 05 . 1980



மறைவு 28 . 08 . 2022

**திருமதி உஷாஜினி ஜனார்த்தன்**

மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உஷாஜினி ஜனார்த்தன் அவர்கள் 28.08.2022 ஞாயிற்றுக் கிழமையன்று இறைபதம் அடைந்தார்.
அன்னார் பத்மநாதன்-புஸ்பராணி தம்பதியரின் அன்பு மகளும், ஜெயபாலன்-அமரர் தவமலர் தம்பதியரின் அன்பு மருமகளும், ஜனார்த்தனின் அன்பு மனைவியும் திவாகினி, கிருஷாயினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், வித்தியாயினி, ஜெயப்பிரதீபன், தனுஷாயினி, சிந்துஜன் ஆகியோரின் சகோதரியும் பிரசாந்தன், மயூரதன் ஆகியோரின் மைத்துனியும் சங்கரப்பிள்ளை கணநாதனின் அன்பு மருமகளும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.08.2022 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 4.00 மணிக்கு தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 248 7144
077 028 0442

தகவல்:
கணவர் மற்றும் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிபெட்கோ கையிருப்பில் போதியளவு எரிபொருள்!

கொழும்பு, ஓக.29

**தட்டுப்பாடு விநியோகிக்கக்கூடிய அளவு டீசல் பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் உட்பட அனைத்து எரிபொருள்களும் கையிருப்பில் உள்ளன என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சிபெட்கோ) தெரிவித்தது.**

நாட்டில் மீண்டும் எரிபொருளுக்கு வரிசைகள் தோன்ற ஆரம்பித்துள்ள நிலையில், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து எரிபொருளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் உட்பட அனைத்து எரிபொருள்களும் சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருள்கள் கொலன்னாவ மற்றும் முத்துராஜவெல எரிபொருள் களஞ்சிய முனையங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. நாட்டில் தட்டுப்பாடு இன்றி விநியோகிக்கக்கூடிய அளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது - என்றுள்ளது. (எ-இ)

## எந்தத் தேர்தல்களானாலும் பெரமுன ஆட்சியமைக்கும்

### சாகர தற்போதும் நம்பிக்கை

கொழும்பு, ஓக. 29

எதிர்வரும் காலங்களில் எந்தத் தேர்தல்கள் இடம்பெற்றாலும் சிறிலங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றிபெற்று ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும். இவ்வாறு பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அரசியல் நிலைவரம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடாளுமன்றத்தில் எமது கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுன அதிக பெரும்பான்மை ஆசனங்களைக் கொண்டுள்ளது. அதன்படியே சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுமாயின் பொதுஜன பெரமுனவுக்கு முன்னுரிமை வழங்குமாறு நியாயமான கோரிக்கையை ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ளோம்.

பொதுத்தேர்தலில் மாவட்ட மட்டத்தில் அதிக வாக்குகளைப் பெற்ற தரப்பினருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குமாறு வலியுறுத்தியுள்ளோம்.

எமது ஆசீர்வாதத்துடன் தற்போதைய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டுள்ளார். பெரமுனவின் அரசாங்கம்தான் தற்போதும் ஆட்சியில் உள்ளது.

அரசியல் ரீதியில் பெரமுன பலவீனமடைந்துள்ளதாக ஒருசிலர் குறிப்பிடுவது தவறானதொரு கருத்தாகும். இனிவரும் காலங்களில் இடம்பெறும் எந்தத் தேர்தல்களிலும் பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெற்று ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும்- என்றார். (ச-இ)



## 100 ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழா

யாழ்ப்பாணம், ஓக. 29

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபையின் 100 ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழா கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

கூட்டுறவு தினப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்கள், அங்கத்தவர்கள், பணியாளர்கள் ஆகியோர் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். கூட்டுறவாளர்களும் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் உபதலைவர் க.மகாதேவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச்செயலர் க.மகேசன் கலந்துகொண்டார். (எ-14,159)

## சுவாச நோய்கள் நாட்டில் அதிகரிப்பு



கொழும்பு, ஓக.29

மக்கள் முறையாக முகக் கவசங்களை அணியாததால் சுவாச நோய்கள் அதிகரித்துள்ளன என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்துள்ளதாவது:-

சிறுவர்களிடையே சுவாசப் பிரச்சினைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

பொதுமக்கள் கொரோனா விதிமுறைகளைப் பின்பற்றி சுவாசம் சார்ந்த பிரச்சினைகளில் இருந்து பாதுகாப்பாக இருக்கவேண்டும். முகக்கவசங்களை முறையாக அணிய வேண்டும் - என்றார். (எ-இ)

## வெளிநாட்டு நாணயங்கள் முறையற்ற கையாள்கை!

### ஆராய பொலிஸ் குழு நியமிப்பு

கொழும்பு, ஓக. 29

முறையற்ற விதத்தில் வெளிநாட்டு நாணயங்களைக் கையாளுவோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரின் கோரிக்கைக்கு அமைய இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழு சட்டரீதியான வங்கி செயற்பாடுகளுக்கு புறம்பாக முறையற்ற விதத்தில் வெளிநாட்டு நாணயப் பரிமாற்றம் மற்றும் வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் ஊடாக வெவ்வேறு பொருள்களை இறக்குமதி செய்வதற்கான நாணயப் பரிமாற்றம் உள்ளிட்டவை தொடர்பில் ஆராயவுள்ளது.

முறையற்ற விதத்தில் வெளிநாட்டு நாணயங்களைப் பெறவோ, செலுத்தவோவேண்டாம் என பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். (ச-இ)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்தினர் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். இன்று முடிவுக்கு வரவேண்டிய முயற்சி கடைசி நேரத்தில் தள்ளிப் போகும்.

**இடபம்:** வம்பு, வழக்குகளில் எதிர்மறை பலன்கள் ஏற்படலாம். மற்றவர் பிரச்சினையில் தலையிடவேண்டாம். மகிழ்ச்சியான செயல்களில் ஈடுபடுவீர்கள்.

**மிதுனம்:** : எதிர்பார்த்த பணவரவு வந்து சேரும். பொருளாதார நெருக்கடி விலகும்.புதிய முயற்சியில் ஈடுபட்டு ஆதாயம் காண்பீர்கள். பொருளாதார நிலையில் உயர்வு உண்டாகும்.

**கடகம்:** வார்த்தைகளில் கவனம் தேவை. பணம், நகைகள் விடயத்தில் எச்சரிக்கை அவசியம். உங்கள் செயல்களில் நிதானம் அவசியம். குடும்பத்தினரால் சில நெருக்கடிக்கு ஆளாவீர்கள்.

**சிம்மம்:** குழப்பம் அதிகரிக்கும் எதைச் செய்வது எதைத் தவிர்ப்பது என்ற முடிவுக்கு வரமுடியாமல் திண்டாடுவீர்கள். புதிய எண்ணம் உருவாகும். ஆசை அதிகரிக்கும்.

**கன்னி:** செலவு அதிகரிக்கும். எதிர்பாராத பயணம் ஏற்படும். உங்கள் செயல் விடாமுயற்சியால் நிறைவேறும். அத்தியாவசிய செயல்களில் மட்டும் ஈடுபடுங்கள். பணம் பல வழிகளிலும் செலவாகி இருப்பு கரையும்.

**துலாம்:** முயற்சிகள் வெற்றியாகும். அடிப்படைத் தேவை நிறைவேறும். எதிர்பார்த்த வருவாய் வந்து சேரும். நண்பர்களிடம் கவனம் தேவை. அவசரப்பட்டு பிறருக்கு செய்யும் உதவியால் சங்கடத்துக்கு ஆளாவீர்கள்.

**விருச்சிகம்:** வியாபாரத்தை விரிவு செய்வீர்கள். பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். செல்வாக்கு உயரும். திட்டமிட்டுச் செயற்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள்.

**தனுசு:** இருப்பிடத்தை விரிவு செய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். உங்கள் எண்ணங்கள் நிறைவேறி மகிழ்வீர்கள். உங்கள் அணுகுமுறை [illegible] உண்டாகும். நினைத்ததில் வெற்றி காண்பீர்கள்.

**மகரம்:** கவனமாக செயற்படவேண்டிய நாள். முயற்சியில் எதிர்பார்த்த நன்மையை கிடைக்காமற்போகும். முயற்சி இழுபறியாகும். மனதைப் பாதிக்கும் வகையில் இன்று சில சம்பவங்கள் நடக்கலாம்.

**கும்பம்:** பழைய பிரச்சினைக்கு முடிவு கட்டுவீர்கள். எதிர்பார்த்த வரவால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர்களிடம் ஏற்பட்ட பகை விலகும். உங்களை விட்டு விலகிச் சென்றவர்கள் தேடி வருவார்கள்.

**மீனம்:** கோயில் தரிசனம் மகிழ்ச்சி தரும். உடல் நிலையில் இருந்த சங்கடங்கள் விலகும்.முயற்சி நிறைவேறும். சிலர் வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள். தேவைக்காக கடன் வாங்குவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊர்காவற்றுறை நார

# திருவருள் மிகு தான்தோன்

# நூ

# இராஜ கோபுர ம



## தலைவரின் ஆசிச் செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் ஈழமணித்திரு நாட்டின் வடபால் அமைந்துள்ள லைடன் தீவில் நாரந் தனைப்பதியில் தான்தோன்றியாக எம்மையெல்லாம் ஆளவந்த அம்பிகைக்கு இராஜகோபுர கட்டுமானப் பணிகள் 2011ஆம் ஆண்டு ஆடித்திங்கள் நான்காம் நாள் அத்திவார மிடப்பட்டு வியாழவரிவரை பூர்த்தி செய்யப்படடிருந்தது. தற்போது இராஜகோபுர கட்டுமானப்பணிகளுடன் மணிமண்டபம், மணிக்கோபுரம் என்பன அழகியமுறையில் கட்டிமுடிக்கப்பட்டு கும்பாபிஷேக நிகழ்வுகள் நடைபெறுவதையிட்டு மட்டற்ற மகிழ்சியடைகின்றேன்.

இராஜகோபுர கட்டுமானப்பணிகளை மேற்கொள்வதற்கான பெருந்தொகை யான நிதியை நாரந்தனை உள்நாட்டு வெளிநாட்டு அம்பிகையின் அடியவர்கள் வாரிவழங்கி உதவினர். அம்பிகையின் ஆலய இராஜகோபுர கட்டுமானப்பணிகள் சிறப்புற அமைவதற்கு அம்பிகையின் திருவருள் தோன்றாத்துணையாக நின்று வழிகாட்டியுள்ளது. இத்திருப்பணிகளும் நித்திய நைமித்திய பூசைகளும் சிறப்பாக நடைபெறுவதற்கு நாரந்தனை வாழ் மக்களும் புலம்பெயர்ந்து உலகநாடுகளில் வாழ்ந்துவரும் அம்பிகையின் அடியவர்களினதும் அயராமுயற்சியும் கைகொடுத்து உதவி வருன்றமை பாராட்டுதற்குரியது.

இராஜகோபுர கட்டுமானப்பணிகளிற்கும் கும்பாபிஷேக நிகழ்கள்வு களிற்கும் பலவழிகளிலும் உதவிகள் செய்து சிறப்பித்த அனைவருக்கும் தலைவர் என்ற வகையில் எனது இதயம் கனிந்த நன்றிகள்.

**வேலுப்பிள்ளை துரைராசா**
**தலைவர்**
**தான்தோன்றி ஸ்ரீமனோன்மணி அம்பாள் ஆலயம்**
**நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை**



## ஆசிச் செய்தி

கருணைத் தாயாக இருந்து அருளையும் நல வாழ்வையும் அகத்தேயும் புறத்தேயும் அள்ளி வழங்கிக் கொண்டிருக்கும் எங்கள் குல தெய்வமான நாரந்தனை தான் தோன்றி தாய்க்கு இராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு உண்மையிலே மிகவும் மகிழ்வாக உள்ளது.

இன்றைய தினம் இக்குடமுழுக்கு நிகழ்வில் கலந்து கொள்கின்ற நாம் அனைவருமே மிகப் பெரிய புண்ணியம் செய்தவர்கள். எமது தந்தை சிவஸ்ரீ. கு. இராஜநாதக் குருக்கள் அவர்களினால் சிறு குழந்தையாக கையெடுத்த எம் அன்னை இன்று பெரு வளர்ச்சியுற்று பெரு மங்கையாக எம் கண் முன்னிருந்து அருள் பாலிப்பதனை பார்க்கையில் உடலும் உள்ளமும் சிலிர்கின்றது. எம் தந்தையைத் தொடர்ந்து அவ் அன்னைக்கு செய்த பணியின் பேறாகவே நீண்ட இடைவெளியின் பின் இன்றைய நிகழ்வினை நடாத்தும் பாக்கியம் எனக்கு கிடைத்துள்ளது. இதுவும் அவள் திருவிளையாடலே என்பது திண்ணம்.

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பதற்கு ஏற்ப இக் கோபுரத்தைப் பார்ப்பவர்கள் மட்டுமல்ல இவ் இராஜகோபுரத்தின் கம்பீரத்திற்கும், அழகிற்கும் அடித்தளமான, ஆக்கபூர்வமான, விடாமுயற்சியான பங்களிப்புக்களை வழங்கிய ஆலய நிர்வாக சபையினர், திருச்சபை பணியினர், அடியர்களா கிய நீங்கள் அனைவரும் புண்ணியப் பேற்றினைப் பெற்றவர்கள். உங்களது இப்பணி மேலும் மேலும் வளர்ச்சியுற்று சிறப்படைந்து நீங்களும் உங்கள் வருங்கால சந்ததியினரும் நோய் நொடியின்றி சீரம் சிறப்புமாக வாழ அன்னையின் அருட் கடாட்சத்தினை வேண்டி ஆசி வழங்குகின்றேன்.

**இராம.ஸ்ரீதரக் குருக்கள்**
**நாரந்தனை லண்டன்**



## எம்மை வாழவைக்க கோயில் கொண்ட தான்தோன்றியே

நாரந்தனை வடக்கில் கோவில் கொண்டு எழுந்தருளி அருளாட்சி புரியும் அம்பிகை மனோன்மணி இன்று இராஜகோபுர குடமுழுக்கு காண்கிறாள் எமது மக்களின் நீண்ட நாள் கனவு இன்று நனவாகிறது.

எமக்கெல்லாம் வாழ்வு தந்து வளமாக்கி எமை ஆளாக்கிய தெய்வத்திற்கு எமது காணிக்கையை பூர்த்தி செய்கின்றோம். சுமார் எழுபத்தியொரு ஆண்டுக ளாக எம்மை தான்தோன்றித் தாய் வழி நடத்துகிறார். மிகச் சிறிய ஆலய மாக இருந்து இன்று இராஜ கோபுரம் கொண்ட கோவிலாக பரிணமித் திருப்பது மனதிற்கு மாண்பு தரும் நிகழ்வாகும். அம்பாள் திருக்கோயில் நாம் சிறுவராக இருந்த காலம் முதல் இப்போதைய நரைப் பருவம் வரை அம்பிகையின் காலடியில் கோவில் நிழலில் வாழ்ந்தவர் - வாழ்பவர் நாம்

எமது கிராமத்தின் செல்நெறி எமது ஆலயத்தோடு பிண்ணிப் பிணைந்த ஒன்று... எமது முன்னோர்கள் ஆசார சீலர்களாகவும் ஒழுக்கமுள்ளவர்க ளாகவும் வாழ்நதார்கள். எனின் அதில் ஆலயத்தின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். எமது வளர்ச்சி மனித மாண்பு உள்ளச் சீர்மை என்பவற்றில் ஆலயமே அச்சாணியாக செயற்பட்டிருக்கிறது. ஆலயம் தொழுவது சாலவும் நன்று. எம் ஊர் மக்கள் நாள்தோறும் ஆலயம் வாருபவர்களும் கிழமைக்கு ஒரு தரம்மாயினும் .தரிசனம் செய்பவர்களும் அப்படியில்லாவிடின் மாதத்திற்கு ஒருமுறையாவது அம்பாளை தரிசிப்பவர்களுமாக இருந்தனர். ஏனெனில் நித்திய பூஜைகளும் வெள்ளிக்கிழமை கூட்டுப்பிரார்த்தனை களும் மாதா மாதம் நடைபெறும் ஏதாவது விசேட தினப் பூஜைகளும் எம்மை கட்டிப் போட்டியிருந்தன.

**வைத்தியலிங்கம் யோகேஸ்வரன்**



## நல்லை ஆதீன குருமுதல்வரின் ஆசிச்செய்தி

அம்பிகைய அடியார்களுக்கு... நாரந்தனை ஊரை ஆண்டு கொண்டிருக்கும் மனோன் மணி அம்பாளுக்கு கும்பாபிஷேகம் நடை பெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். தானாகவே தோன்றி ஊரின் உடைய பெருமையை உலகறியச் செய்கின்ற நாயகியாக விளங்குபவள் அம்பிகை இன்று கோபுரதரிசனம் கோடி புண்ணியம் என்ற வகையில் கோபுரமும் மணிமண்டபமும் அமையப்பெறுவது ஆலயத்துக்கு பெருமை சேர்க்கின்றது. வேண்டுவார் வேண்டுவதை இருந்தவகையில் அம்பிகை இவ்வாலயத்தில் இருந்து அருளாச்சி புரிகின்றாள். பொறுமையை உணர்த்தும் பொருட்டு சைவ மகா சபை மலரை வெளியிடு செய்து அபிஷேகத்தை சிறப்பிப்பது பெருமைக்குரியது. இம்மலர் சிறப்புற அமைய மலராசிரியரையும் கட்டுரைகளும் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.

என்றும்வேண்டும் இன்ப அன்பு!



## சிவஸ்ரீ குமார சரவணபவக் குருக்களின் ஆசிச் செய்தி

ஆன்மாக்கள் முப்பிணி நீங்கி இகபரசுங்கள் பெற்று வாழ ஆலய வழிபாடு அவசியமாகிறது.

உலகில் வானம் பொழிந்து, பயிர்கள் செழித்து, குடிகள் நலம் பெற்று கோன் உயர ஆட்சி புரிய வேண்டி பூஜைகள் சிறப்பற நடைபெற வேண்டும். சிவாகம முறை தவறாது குரு நித்திய நைமித்திய கிரியைகளை ஆற்றுவார். நைமித்திய கிரியைகளில் அதி மகோன்னத மான கிரியை மஹா கும்பாபிஷேகமாகும்.

இலங்கைத் திருநாட்டின் சிரம் என மிளிரும் யாழ் குடாவின் பால் இந்து மகா சமுத்திர தீர நாரந்தனை பண்டாரபுலம் கரை தனில் பக்தி ஞானப் பொக்கிஷமாக முன்னோர் கை தவழ்ந்த உலக அன்னை தான் தோன்றி வேரூன்றிய திருத்தலத்தில் ஆகம அருட்பெருக்கும் அடியவர் பெரு விரும்பும் இணைந்து ஐந்து தல இராஜ கோபுரம் அமையப் பெற்றிருப்பது அன்னையின் அருட்பிரவாகமே.



## மகேஸ்வரக் குருக்களின் வாழ்த்துச் செய்தி

நாரந்தனையின் வடக்கிலே தான்தோன்றியாக மந்திர சிம்மாசனத்தில் வீற்றிருந்து அடியவர் களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஆதிபராசக்தியான அன்னை ஸ்ரீ மனோன் மணி அம்பாள் ஆலயம் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். இவ்வாலயத்தில் பஞ்சதல ராஜகோபுர கும்பாபிஷேகமும் அதனை முன்னிட்டு சிறப்பு மலர் ஒன்றும் வெளியிட இருப்பது மகிழ்ச்சியான பயனுள்ள பணியாகும். மானிடப் பிறவியின் நோக்கமே இறைவனை அடைவதாகும். எண்ணெயில்லாமல் எப்படி விளக்கு எரியாதோ அதேபோல் இறைவனுடைய சக்தியில்லாமல் மனிதன் வாழமுடியாது. அப்பேர்ப்பட்ட மனோன்மணித் தாயின் சக்தியை ஆலயங்களில் நடைபெறும் வழிபாட்டின் மூலமாக மனிதன் அறியவும் உணரவும் முடியும்.



## சிவஸ்ரீ நவரத்தின பிரபுதேவக் குருக்களின் வாழ்த்துச்செய்தி

குருக்கடல்சூழ் இலங்கைத் தீவில் இராவண சுவர மன்னன் காலத்துக்கு முன்பாகவே இலங்கைத் திருநாட்டின் வடபால் ஊர்காவற் றுறைப் பகுதியில் பக்திமை தெரியும். தமிழ்நூல் மேன்மையும் போற்றிவரும் நாரந்தனை வடக்கில் 1950களில் நில (பூமி) வழியாலும் நீர் (கடல்) வழியாலும் தோற்றம் பெற்ற (தான் தோன்றி) ஸ்ரீ மனோன்மணி அம்பாள் 1958இல் குடமுழுக்குப் பெருஞ்சாந்தி கண்டவள். பின்னும் பல பெருஞ்சாந்தி விழாக் களைக் கண்டு வளர்ந்தவன் இவ்வருடம் இராஜகோபுர பெருஞ்சாந்தி காணப் போகிறாள்.



## செஞ்சொற்செல்வரின் ஆசிச் செய்தி

நாரந்தனை அருள்மிகு தான்தோற்றி மனோன் மணி அம்மன் திருக்கோவிலில் ஐம்பத்தைந்து அடி உயரமான இராஜகோபுரம் அமைக்கப்பட்டு மகாகும்பாபிஷேம் நடைபெறுவது குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன். நாரந்தனை மக்கள் தங்கள் குலதெய்வத்தின் சிறப்புக்காக அயராது உழைத்து கோபுரத்திருப் பணியை நல்லவண்ணம் நிறைவேற்றியுள்ளார்கள். திருப் பணிக்கு உதவிய அன்பர்கள் அனைவருக்கும் எமது நல்லாசிகள். உரித்தாகுக. போருக்குப் பின்னால் எமது சைவ ஆலயங்களின் திருப்பணி வேலைகளுக்கு புலம்பெயர்ந்து வாழும் எம் சமூகம் ஆற்றும் தொண்டு மறக்க முடியாது. தீவகப் பகுதிகளில் இன்று மதம் மாற்றுபவர்களின் செயற்பாடும் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் சுதேசிய மக்களின் பாரம்பரிய சமயமாகிய சைவத்தைக் காப்பாற்ற வேண்டியது எம் கடனாகும் எனவே ஆலயப் பணிகளில் அக்கறையோடு செயற்பட்ட அனைவரும் நன்றிக்குரியவர்கள். அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம் என்ற பாரதியாரின் பாவரிகளுக்கு அமைய அன்னை [illegible] பிரார்த்தித்து அமைகிறேன்.

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

## நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் தோற்றமும் வளர்ச்சியும்



ஈழமணித் திருநாட்டின் வடபால் திருமூலரால் சிவபூமி எனப் போற்றப்பட்ட யாழ் கு நாட்டின் சப்ததீவுகளில் ஒன்றாகிய லைடன் தீவின் மத்தியில் அமைந்துள்ள நாரந்தனை கிராமத்தில் பண்டாரபுலம் எனும் இடத்தில் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பா ஆலயம் அமைந்துள்ளது. இவ்வூர் நாரந்தனை வடக்கு கடற்கரையோரத்தில் அரசுக் சொந்தமான முடிக்குரிய நிலமாக இருந்ததுடன் கற்பாறைகளும் முருகைக்கற்களு நிறைந்த நிலப்பரப்பைக் கொண்டதாகவும் காணப்பட்டது. வீதிகளைச் செப்பனிடுவதற் 1951ஆம் ஆண்டு பங்குனி மாதம் அரச அதிபரின் அனுமதியுடன் இக்காணிகளில் கற் அகழ்ந்து எடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்த திரு.மனுவேற்பிள்ளை, திரு.துரைசா ஆகியோர் கற்பாறைகளை வெடி வைத்து உடைத்தபோது அடியில் இருந்து தங் நாணயங்களும் அம்மன் விக்கிரகமும் வெளிவந்தமையைக் கண்டு அயலவர்களுக்கும் தெரிவித் அவ்விடத்தில் அரசின் அனுமதியுடன் சிறு கொட்டில் அமைத்து அம்மனை, நாரந்தனை வாழ் மக்க வழிபடலாயினர். கண்டெடுக்கப்பட்ட அம்மன் தங்கத்திலான விக்கிரகம், தங்கநாணயங்கள் எனபதனா புதைபொருள் ஆராய்ச்சி திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட நாரந்தனையைச் சேர்ந்த திரு.கு.அருளம்பலம் அவர்கள் கண்டெடுக்கப்பட்ட அம்மன் விக்கிரகத்தைப் போன் திரைச்சீலையில் வரைந்து அக்கொட்டிலில் கட்டிவிட மக்கள் அங்கு சென்று அம்மனை வழிபடலாயினர்.

அம்மன் விக்கிரகம் கண்டெடுக்கப்பட்ட இடத்திற்கு அயலில் வாழ்ந்து வந்த திரு.ச.உலகநாதபிள்ளை அவர்க அம்மனுக்கு நாள்தோறும் விளக்கு வைத்து அம்மனை ஆதரித்து வந்தார். அவரைத் தொடர்ந்து அயலில் வசி வந்தவரான திரு.ஆ.கனகரத்தினம் அவர்கள் விளக்கேற்றி வந்ததுடன் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் கற் தீபாராதனையும் செய்து வந்தார். இக்காலகட்டத்தில் நாரந்தனையைச் சேர்ந்த திரு.மு.கந்தையா அவர்களுக் அம்பாள் கனவில் தோன்றி "நாளை நீ என்னைக் கடலில் காண்பாய்" எனக் கூறிச் சென்றார். மறுநாள் கால கடற்கரைக்குச் சென்று தேடிப்பார்த்தபோது முருகைக்கல்லிலான இருண்டுதலைகள் உடைந்த நிலையில் மூன் தலைகளுடனான நாகபாம்பு வடிவில் விக்கிரகம் இருப்பதைக்கண்டார். அச்செய்தியை அவ்விடத்து மக்களுக் தெரியப்படுத்த அவர்களும் இணைந்து அதனை எடுத்து வந்து ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த கொட்டில் வைத்து பூசை, அபிஷேகம் நடாத்தி வழிபட்டு வரலாயினர். 1953ஆம் ஆண்டு வீசிய புயல் காற்றினால் கொட் சரிந்து வீழ்ந்தமையால் நாகத்தின் ஒருதலை உடைந்து விட்டது. எஞ்சிய இருதலைகளுடனான நாக விக்கிர இன்றும் ஆலய முன்மண்டபத்திலே வைக்கப்பட்டு அபிஷேகங்கள், பூசைகள் நடைபெற்று வருகின்ற குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

நாரந்தனை வாழ் மக்கள் அம்மன் மீது அளவில்லாத பக்தியும் நம்பிக்கையும் கொண்டிருந்தனர். தமது கா தெய்வம் என நம்பி வழிபட்டனர். அம்மனும் மக்களுக்கு அற்புதத்தெய்வமாக அருளை வழங்கி மக்களி குலதெய்வமாக எல்லோர் மனங்களிலும் குடிகொண்டு அருளாட்சி செய்தார். அதன் காரணமா அருட்தெய்வமான அற்புத அம்பாளுக்கு நிரந்தரமான ஆலயம் ஒன்று அமைக்க வேண்டும் என மக்க பேரவாக் கொண்டனர். அதனை முன்னின்று செய்வதற்கு ஓர் அமைப்பு வேண்டும் என கருதினர். மக்களி விருப்பை அறிந்த நாரந்தனை கணேசவித்தியாசாலை அதிபர் திரு.க.கணபதிப்பிள்ளை அவர்கள் 1951ஆ ஆண்டு வைகாசி மாதம் 20ஆம் திகதி சைவசமய மக்களை ஒன்று கூட்டி அவர்களின் அபிப்பிராயங்களை கேட்டறிந்து அம்பாளுக்கு ஆலயம் அமைக்க வேண்டும் என்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இ செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்காக அன்றைய தினமே "சைவமகாசபை" எனற அமைப் உருவாக்கப்பட்டது. சைவமகாசபையின் போஷகராக சைவப்புலவர் திரு.மு.மயில்வாகனம் அவர்களு தலைவராக திரு.தம்பு தில்லைநாதர் அவர்களும், செயலாளராக திரு.க.கணபதிப்பிள்ளை அவர்களு பொருளாளர் திரு.வி.நமசிவாயம் அவர்களும் கொண்ட நிருவாகசபை ஒன்று உருவாக்கப்பட்டது.

அம்பாளின் விக்கிரகம் கண்டெடுக்கப்பட்டு கொட்டில் அமைத்து வழிபட்ட இடம் அரசுக்குச் சொந்தமானத இருந்தமையால் அரசிடம் இருந்து சைவமகாசபையினர் காணியைப் பெறுவதற்கான முயற்சியில் ஈடுப காணியை பெற்றுக் கொண்டனர். 1954ஆம் ஆண்டு தை மாதம் இருபத்தாறாம் திகதி நாரந்தனையைச் சேர் திரு.மூ.செல்லப்பா அவர்களால் ஆலய கட்டிடத்துக்கான அத்திவாரமிடப்பட்டு கட்டுமானப் பணிகள் துரிதகதியி நடைபெற்றது. மூலஸ்தான ஸ்தூபியையும் அதிலுள்ள சிற்பங்களையும் சுருவிலைச் சேர்ந்த நா.தங்கவே ஸ்தபதி அவர்களாலும், ஆலயத்திற்கான கருங்கல் விக்கிரகங்கள், ஐம் பொன்னாலான எழுந்தரு விக்கிரகங்கள், பெரிய மணி என்பன தாவடியைச் சேர்ந்த திரு.நா.சோமசுந்தரம் அவர்களாலும் உருவாக்கப் ஆலயத்தில் பிரதிஸ்ட்டை செய்யப்பட்டது. இக்காலகட்டத்தில் அரச காணிகள் மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் திட் கொண்டுவரப்பட்டது. ஆலயத்தை அண்டிய பிரதேசமும் அரசுக்கு சொந்தமானதாக இருந்தது. அக் காணியி மூன்றரை ஏக்கர் நிலம் ஆலயத்துக்கும் ஏனைய நிலப்பரப்பில் ஒரு குடும்பத்துக்கு அரை ஏக்கர் வீதம் பதினா குடும்பங்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டது. அக்காணிகளில் சைவசமய மக்கள் குடியேறினர். இதனால் அம்ம ஆலயவளர்சிக்கு பெரிதும் உறுதுணையாக அமைந்தது.

அம்பாளின் ஆலய கட்டிட கட்டுமானப்பணிகள் நிறைவு பெற்றதும் 1958ஆம் ஆண்டு ஆலயத்துக்குரி விக்கிரகங்களை பிரதிஸ்டை செய்வதற்கான கும்பாபிஷேகம் சைவமகாசபையின் தலை திரு.த.தில்லைநாதர் அவர்களின் தலைமையில் சிவஸ்ரீ.கு.இராமநாதக்குருக்கள் அவர்களால் நடாத்துவத சைவமகாபையினர் தீர்மானித்தனர். இதன்படி கும்பாபிஷேகம் 1958ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆவ மாதம் நான்காம் திகதி புதன்கிழமை சுவாதி நட்சத்திரத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. அதனைத் தொடர் நாற்பது நாட்கள் அபிஷேகங்கள் நடைபெற்றது. நாரந்தனை வாழ் சைவசமயிகள் அன்னையி அருட்கடாட்சத்தைப் பெற்று சீரும் சிறப்பும் பெற்று மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

சைவமகாசபையினரினதும் மக்களினதும் விடாமுயற்சியும் பக்தியுணர்வும் ஆலயத்தின் வளர்ச்சிக் ஊன்றுகோலாக அமைந்தது. 1959ஆம் ஆண்டு எழுந்தருளி அம்மன் விக்கிரகத்தை பிரதிஷ்டை செ அலங்காரத்திருவிழா செய்யவேண்டும் என்ற விருப்பின் அடிப்படையில் திரு.நாகநாதபிள்ளை கந்தகு அவர்களின் உபயமாக ஐம்பொன்னாலான எழுந்தருளி விக்கிரகம் மண்கும்பான் ஆலயத்தில் இருந் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டு அலங்காரத்திருவிழா நடாத்தப்பட்ட அலங்காரத்திருவிழாக்கள் தொடர்ந்து 1972ஆம் ஆண்டு வரை நடைபெற்று வந்தது. 1972ஆம் ஆண்டு ஆ புனருத்தாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு புதிதாக வைரவர் கோயில் அமைக்கப்பட்டு 1973ஆம் ஆண் பிரமாதீச வருடம் ஆவணிமாதம் 17ஆம் நாள் புனருத்தாரண மகா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற் இவ்வாறு ஆலயத்தின் வளர்ச்சி மென் மேலும் வலுப்பெற்றது.

தான் தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாளுக்கு ஒரு சித்திரத்தேர் செய்யவேண்டும் என அடியார்கள் 1966ஆ ஆண்டு பராபவ வருடம் புரட்டாதி மாதம் 14ஆம் நாள் வெள்ளிக்கிழமை ஆலயமண்டபத்தில் ஒன்று கூ தேர்திருப்பணிச் சபையை அமைத்தனர். ஆரம்பித்தனர்..அவர்களின் முயற்சியின் பயனாக 1976ஆம் ஆண் தேர்த்திருப்பணிகள் இனிதே நிறைவுற்றது.. கொடிமரம் வேண்டும் என சபையினர் ஆலோசிக்கும் வேல நாரந்தனையைச் சேர்ந்த திரு.வை.நகுலேசபிள்ளை அவர்கள் தனது உபயமாக செப்புத்தகட்டால் ஆ கொடிமரம் நிறுவ உதவினார். அம்பிகையின் மகோற்சவம் நளவருடம் 1976ஆம் ஆண்டு ஆவணிமா 12ஆம் நாள் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நளவருடம் 1976ஆம் ஆண்டு ஆவணிமா 20ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை வெள்ளோட்டம் நடைபெற்றது. ஆவணி 21ஆம் நாள் திங்கட்கிழமை அம்பா தனது புதிய சித்திரத்தேரில் முதன்முதலாக வீதியுலா வந்து மக்களுக்கு காடசியளித்து அருள்பாலித்தாள்.

1989ஆம் ஆண்டு ஆலயத்திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் உள்வீதியில் விநாயகர், முருகன் சந்தா கோபாலர், நவக்கிரகமூர்த்திகள் சண்டேசுரர் ஆகிய தெய்வங்களுக்கு ஆலயம் அமைத்து பிரதிஷ்டை செ சுக்கில வருடம் ஆனித்திங்கள் 26ஆம் நாள் திங்கட்கிழமை அத்த நட்சத்திரத்தில் மூன்றாவது கும்பாபிஷே சிறப்பாக நடைபெற்றது. அன்னையின் ஆலயவளர்ச்சி படிப்படியாக முன்னேற்றம் கண்டது. ஆலயத்துக்கா இராஜகோபுரம் அமைப்பதற்காக 2011ஆம் ஆண்டு ஆடிமாதம் 14ஆம் திகதி அத்திவாரமிடப்பட்டு வியாழ வரை கட்டப்பட்டது. தொடர்ந்து கோபுர வேலைகள் நிறுத்தப்பட்டு 2014 ஆம் ஆனித்திங்கள் 12 ஆம் நா பாலஸ்தானம் செய்யப்பட்டு வில்லுமண்டப வேலைகள் நடைபெற்று 2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வரு ஆவணித்திங்கள் 11 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை தொடர்ந்து 48 நாட்கள் மண்டலபிஷேகமும் நடைபெ 2018,2019, 2020 ஆண்டு மஹோற்சவம் சிறப்பாக இடம்பெற்றது. தொடர்ந்து இடைநிறுத்தி வைக்கப இராஜகோர திருப்பணி வேலைகளை கேமாக முன்னேற்றும் நோக்குடன் திருப்பணிச்சபை உருக்கப்பட்டு பு பெயர் அம்பிகை அடியவர்களுடன் உதவியுடன் பஞ்சதள இராஜகோபுரம் மணிமண்டபமும், தெ மணிக்கோபுரமும் நிறைவுறுத்தப்பட்டு 2022 ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் 29 ஆம் நாள் மஹ கும்பாவிஷேகம் இடம்பெறுகிறது.

கோபுரதரிசனம் கோடி புண்ணியம்"

**செல்வி மேனகா கிருஸ்ணபிள்ள**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரந்தனை வடக்கு - பண்டாரபுலம்
# ன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம்
## ூதன பஞ்சதல
# மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்-2022



### சைவ மகா சபையின் முன்னாள் செயலாளரின் வாழ்த்துச்செய்தி

தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணிஅம்பாளின் பாதார விந்தங்களை வணங்கிக் கொண்டு வெளிவரவிருக்கும் கும்பாபிஷேக மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியை எழுத முற்படுகின்றேன். கோயில் இல்லாஊரில் குடியிருக்கவேண்டாம் என்ற குறையைப் போக்க 1951ம் ஆண்டு பங்குனி மாதம் நாரந்தனைவடக்கில் தான்தோன்றியாகஅம்பாள் பிரகாசித் தாள். அன்று முதல் அம்பிகைக்கு ஆலயம் அமைக்க வேண்டு மென்றுமக்கள் ஆர்வங்கொண்டனர். அம்பாளுக்கு ஆலயம் அமைத்து காட்சி தந்த ஏழாவது (1958) வருடத்தில் அம்பிகையை பிரதிஸ்டை செய்து கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அம்பிகைக்கு இராஜகோபுரம் கட்டவேண்டும். அம்பிகை காட்சி தந்த அறுபதாவது வருடத்தை சிறப்பாக கொண்டாட வேண்டுமென்ற ஆவலால் 2011ம் ஆண்டு இராஜகோபுரம் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. தவிர்க்க முடியாத காரணத்தால் இடை நிறுத்தப்பட்டது. மீண்டும் புலம்பெயர்ந்து போய் வெளிநாடுகளில் வாழும் அம்பிகையின் அடியார்களின் முயற்சியால் 2021ம் ஆண்டு இராஜகோபுர கட்டுமாணப்பணி ஆரம்பிக்கப்பட்டது. யாவும் பூர்த்தியடையும் நிலையில் உள்ளது. இன்று (ஆவணி) கும்பாபிஷேக நிகழ்வுகள் நடைபெற இருக்கின்றது. இவ்விழா சிறப்புடன் நடைபெற அம்பிகையை வணங்கி வேண்டுகின்றேன்.

இது தொடர்பாக ஒரு விசேடமலர் வெளிவரவுள்ளது. அம்மலரில் ஆலய வரலாறு. அன்று முதல் நடைபெற்றவிசேடங்கள் ஆலயம் அமைந்த வரலாற்றையும் அன்னையின் அருட்செயல்களையும் இன்றைய இளம் சமூகத்தினரும். வரும் காலசந்ததியினரும் உணர்த்திடவும்.வாழ்நாளெல்லாம் அன்னை மறவாது துதித்திடவும் வழிசெய்யும் ஆவணமாக இந்நூல் உதவும் என நம்புகின்றேன்.

இன்று நடைபெறும் இராஜகோபுரகும்பாபிஷேகம் எவ்வித குறையுமில்லாமல் சிறப்பாக நடைபெற வேண்டுமென்றும். வெளிவரவிருக்கும் கும்பாபிஷேகமலர் சிறப்புடன் வெளிவர வேண்டுமென்றும் எல்லாம்வல்ல தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்மாளை வணங்கி வேண்டுகின்றேன

**சு.இராமலிங்கம்,**
**இராஜகோபுரதிருப்பணிசபைசெயலாளரும்,**
**சைவமகாசபையின் முன்னாள் செயலாளரும்.**



### அ. உமாமகேஸ்வரனின் வாழ்த்துச்செய்தி

யாழ்ப்பாண மாவட்டத்தின் தென்மேற்குப் பாகத்தில் அமைந்த கிராமம் நாரந்தனை. ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட இக்கிராமத்தில் அருளொளி வீசும் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம் பல தசாப்த வரலாறு கொண்டமைந்தது.

1951 ஆம் ஆண்டு பங்குனி மாதம் இவ்வாலயம் அமமந்துள்ள இடத்திலே உலோகத்தாலான அம்பாள் விக்கிரகம் கண்டெக்கப்பட்டு. தொல்பொருட் திணைக்களம் அதனைக் கொண்டு சென்றது. இந்த நிலையில் அவ்வூர் மக்களால் 1951 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 20 ஆம் திகதி சைவ மகாசபை உருவாக்கப்பட்டு விக்கிரகம் கண்டெடுக்கப்பட்ட இடத்தில் கோயில் கட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

அம்பாளின் திருவருளும் ஊர் மக்களின் முயற்சியும் அவ்விடம் அருளொளி வீசும் தலமாக மாறி. 1958 இல் முதலாவது கும்பாபிஷேகமும் 2017 இல் ஐந்தாவது கும்பாபிஷேகமும் கண்ட இவ்வாலயம். இன்று ஐந்து தளங்களும் மணி மண்டபமும் கொண்டமைமந்த இராஜகோபுரக் கும்பாபிஷேகம் காணவிருப்பது இறையருளும் நம் தவப்பயனும் அன்றி வேறில்லை.

**பணிப்பாளர் இந்து சமய கலாசார திணைக்களம்**



### பிரதேச செயலரின் வாழ்த்துச்செய்தி

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக் உலகமெல்லாம்"

ஈழமணித் திருநாட்டின் யாழ்குடாவின் தீவுகளின் வடக்கே காவலூரின் நாரந்தனை வடக்கு கிராமத்தில் தாணாகத்தோன்றி கடலலையின் ஓசையில் பழம் பெரும் ஆலமரங்கள் புடைசூழ ஆர்ப்பரிப்பின்றி இந்து மதத்தின் தனித்துவத்தினையும் நம்பிக்கையோடு தன்னை வழிபடும் மக்களிற்கு என்றும் அருள்பாலிக்கின்ற ஸ்ரீ தான்தோன்றி மனோன்மணி அம்பாளின் அடியார்கள் இந்துமதத்தின் தொன்மையும் அதன் மகிமையினையும் பேணிக்காக்கும் வகையில் அடியவர்கள் அனைவரும் ஒற்றுமையான தலைமைத்துவத்தின் கீழ் செயற்படுவது மாத்திரமின்றி சமய்த்தினுடைய ஒழுக்க நெறி நடைமுறைகளை இளைய தலைமுறையினரிற்கு முறையான வழிப்படுத்தல் மூலம் நகர்த்திச் செல்வது தற்போதய காலச்சூழ்நிலையில் ஆலய பரிபாலனசபையினரின் மெச்சுதற்குரிய ஒரு பணியாகக் காணப்படுகின்றது. அத்துடன் அம்பாளின் அருளாசியோடு நாடுகள் கடந்தும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற புலம்பெயர் உறவுகளிற்கிடையேயும் ஒரு முறையான கட்டமைப்பினை ஏற்படுத்தி அம்பாளின் ஆலய வளர்ச்சியிலும், கிராமத்தின் ஒற்றுமைக்கு சான்றாக விளங்குகின்றது. இவ் ஒற்றுமையின் பலனாக "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" எனும் ஆன்றோர் வாக்கிற்கிணங்க அம்பாளின் அடியவர்கள் மற்றும் புலம்பெயர் உறவுகளின் பங்களிப்புடன் அழகிய இராஜ கோபுரத்தினை அமைத்து பிரதிஸ்டா மகாகும்பாபிஷேகம் செய்து வழிபடும் இப்பேறு பெற்றமை அம்மக்கள் செய்த பெரும் பாக்கியம் என்றால் அது மிகையில்லை. அந்தவகையில் எதிர்வரும் 2022ம் ஆண்டு ஆவணி மாதம் 29ம் திகதி இடம்பெறவுள்ள கும்பாபிஷேகம் நிகழ்வும் அதனோடு இணைந்த விசேட பூசை வழிபாடுகளும் சிறப்புற அமையவும் இவ் நிகழ்வைச் சிறப்பித்துச் சிறப்பித்து வெளியிட உள்ள கும்பாபிஷேகம் சிறப்பு மலரானது காலத்தின் கண்ணாடியாக அடுத்த தலைமுறைக்கு செய்தியைக் கடத்தும் ஓர் நன்னூலாகவும் வெளிவரவும் எல்லாம் வல்ல அம்பாளின் பக்தி மயமான அருளாசி இப்பகுதி வாழ் மக்களுக்கு நிறைவாக கிடைக்கப்பெற்று அனைவரும் வையத்துள் வாழ்வாங்கு வாழ எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி மஞ்சுளாதேவி சதீஷன் (பிரதேச செயலாளர்)**
**தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை**



### செயலாளர் உள்ளத்திலிருந்து....

இம்மையில் சகல செல்வங்களையும். மறுமையில் வீட்பேற்றையும் அழிக்கவல்ல அன்னை சொரூபமான. எல்லாம் வல்ல நாரந்தனை தான் தோன்றி அம்பாளின் பாதரவிந்தகங்களை நினைவில் கொண்டு. எம்மையெல்லாம் அருளாசி செய்து கொண்டிருக்கும் அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகி. புதுப்பொலியுடன் கும்பாபிஷேகம் காணும் இத்தருணத்தின் விம்பமாக வெளியிடப்படும் கும்பாஷேக மலரை எண்ணி மனம் மகிழ்றோம். எம்மக்கள் செய்ல் வினைப் பயனாய் கல் விளந்து தோற்றிய தாயவள். "நாளை நீ என்னை கடலில் காண்பாய்" என்ற வாசகத்துடன் கனவு வாக்குச் சொல்லி மறுநாள் காலையிலேயே மூன்று தலையுடைய கல்லில் சமைந்த நாகமாய் தோற்றம் தந்து எம்மை ஆட்சி செய்தவள். வருடாவருடம் ஆவணி மாதம் இடம்பெறுகின்ற ஆலய உற்சவ காலங்களில் நெடுந்தூரங்களிலிருந்தெல்லாம் எம் அனைன்னயின் திருக்கொலம் காண் ஓடொடி வருகின்ற மக்களை. எழுந்தருளி நின்று அருள் தோற்றம் காண்பிக்கும் மெய்காட்சி காண கண் கோடி வேண்டும். இன்றும் எம்மக்களின் வறுமையை போக்கவும். எம் இனம் சந்ததியினரின் கல்விச் செயற்பாட்டை ஊக்கவிக்கவும். வளர்ந்து வரும் சிறார்களுக்கு தொழில் வழங்கவும். முதியவர்களின் நலன் பேணவும் எம் அம்பாளின் அருட்காட்சம் கிடைத்திருக்கின்றமை பேறாகும்.

**சி.தனபாலன்**



### அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி

நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாளின் இராஜகோபுர மகா கும்பாபிஷே மலருக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

"கோபுர தரசினம் கோடி புண்ணியம்" என்பர். எமது ஆலயங்களில் தூரத்தில் வரும் பொழுதே கண்ணுக்கு காட்சி தந்து இறைபக்தியை எமக்கு ஊட்டுவது கோபுரங்களாகும். ஆலயத்திற்கு அழகும் மெருகும் ஊட்டுவது மட்டுமன்றி ஆலயம் அமைந்துள்ள கிராமத்தின் அடிதாங்கியாகவும் கோபுரங்கள் விளங்ககின்றன. கோபுரத்தைப் பார்த்து அரோகரா என கைதூக்கி வழிபடும் போது எமது பார்வைகள் வானத்தை நோக்கி உயர்கின்றன. இவ்வாறு பார்வைகள் உயரும் பொழுது மன அமைதி அடைவதுடன் எமது மனத்தில் உள்ள எண்ணங்களும் விருத்தி அடைகின்றன. எண்ணங்கள் விருத்தியடையும் பொழுது நல்ல சிந்தனைகளும். செயற்பாடுகளும் எமக்கு ஏற்படுகின்றன. இந்த எண்ணங்கள் எம்மை வாழ்க்கையில் வாழ்வாங்கு வாழ வைக்க உதவுகின்றது. இந்த வகையில் நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் அருள்பாலித்து ஆட்சி செய்யும் இவ்விடத்தில் ஊர் மக்கள் இதனை நிர்வகிக்கும் நிர்வாகக் குழுவினர். வெளிநாடுகளில் வாழும் புலம் பெயர்ந்தோர் என அனைவரினதும் ஒத்துழைப்புடன் அம்பாளுக்கு இராஜ கோபுரம் மைத்து 28.08.2022 அன்று இராஜ கோபுர மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளமை அந்த அம்பாளின் அருட்கடாச்சம் தான் இராஜ கோபுர மகா கும்பாபிஷேகத் திற்கு உழைத்த அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் எனக்கு இச் சந்தர்ப்பினை வழங்கியமைக்கு நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அம்பாளின் அருட்கடாச்சம் அனைவருக்கம் கிடைப்பதாக.

**க.மகேசன்**
**அரசாங்க அதிபர்**



### கோ.சிவரஞ்சன் ஐயாவின் வாழ்த்துரை

"கோபுரதரிசனம் கோடிபுண்ணியம்" என்ற ஆன்றோர் வாக்குக்கிணங்க நாரந்தனைஅருள்மிகுதான்தோன்றி ஸ்ரீ மனோன்மணிஅம்பாள் ஆலய இராஜகோபுர கும்பாபி ஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன். யாழ்ப்பாண குடாநாட்டின் தென்மேற்கே ஊர்காவற்றுறைக்கு அண்மித்ததாக அமையும் நாரந்தனை கிராமத்தில் அமைந்துள்ள மனோன்மணி அம்பாள் திருக்கோயில் 1954ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டதாக அறியமுடிகின்றது. 1951ஆம் ஆண்டில் பண்ணைப் பாலம் அமைக்கப்பட்டவேளை கல் அகழ்வு செய்யப்பட்ட இடத்தில் அம்பாளின் விக்கிரகமும்.பழைய காலத்து நாணயங்களும் வெளி வந்தமையினால் இத்திருத்தலம் தோற்றம் பெற்றதாக ஆலய வரலாறு கூறுகின்றது.

தேர் திருப்பணி நடைபெற்று புதிய சித்திரத்தேரில் அம்பாள் அருள் பாலிக்க. ஆக்க பூர்வமான பணியினை தேர் திருப்பணிச் சபையினர் மேற்கொண்டமையும். அம்பாளுக்கு இராஜகோபுரம் அமைக்கப்படவேண்டும் என்னும் சித்தத்தில் சைவமகாசபையினர். அடியவர்கள் அனைவரதும் பங்களிப்பினால் இராஜகோபுரம் அமையப் பெற்றிருப்பதும் நாரந்தனை மக்களுக்கு மட்டுமல்லாது. அனைவருக்கும் பெருமையாகும். அமைக்கப்பட்டுள்ள இராஜகோபுரம் அம்பாளின் அருளை அனைத்து ஜீவராசிகளுக்கும் அள்ளிவழங்கும் என்பதுடன். இராஜகோபுர கும்பாபிசேகத்தை முன்னிட்டு மலரும் சிறப்பு மலர் சிறப்புடன் மலர உழைத்த அனைவரையும் பாராட்டி நல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு. கும்பாபிஷேக நிகழ்வு சிறப்புற நடைபெற இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.



### எம்.ஜி. காண்டீபனின் ஆசிச் செய்தி

நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாளின் இராஜ கோபுர மகா கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துக் களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். "கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பர்" எமது ஆலயங்களில் தூரத்தில் வரும் போதே கண்ணுக்கு காட்சி தந்து இறை பக்தியை ஊட்டுவது கோபுரங் களாகும். ஆலயத்திற்கு அழகும் மெருகும் ஊட்டுவது மட்டுமன்றி ஆலயம் அமைந்துள்ள கிராமத்தின் இடி தாங்கியாகவும் கோபுரங்கள் விளங்குகின்றன. கோபுரத் தைப் பார்த்து அரோகரா என கை தூக்கி வழிபடும் போது எமது பார்வைகள் வானத்தை நோக்கி உயர்கின்றன. இவ்வாறு பார்வைகள் உயரும் போது மன அமைதி அடைவதுடன் எமது மனதில் உள்ள எண்ணங்களும் விருத்தியடைகின்றன. எண்ணங்கள் விருத்தி அடைகின்ற போது நல்ல சிந்தனைகளும் செயற்பாடுகளும் எமக்கு ஏற்படுகின்றன. இந்த எண்ணங்கள் எமது வாழ்க்கையில் வாழ்வாங்கு வாழ வைக்க உதவுகின்றன.

இந்த வகையில் நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் அருள் பாலித்து ஆட்சி செய்யும் இவ்விடத்தில் ஊர் மக்கள். இதனை நிர்வகிக்கும் நிர்வாகக் குழுவினர். வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர்ந்தோர் என அனைவரினதும் ஒத்துழைப்புடன் அம்பாளிற்கு இராஜ கோபுரம் அமைத்து 28.08.2022 அன்று இராஜ கோபுர மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளமை அந்த அம்பாளின் அருட்கடாட்சம்தான். இராஜ கோபுர மகா கும்பாபிஷேகத்திற்கு உழைத்த அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் ஆலயங்கள் சமயப்பணியோடு சமூகப் பணிகளையும் மேற்கொள்வதற்கு அடியார்களை வழிகாட்ட வேண்டும். குறிப்பாக ஒருவர் தனது பிள்ளைகளுக்கு எவ்வளவு சொத்து சேர்த்தாலோ அல்லது அவர்களை சிறந்த கல்விமான்களாக உருவாக்கினாலோ அவர்களை தர்மம் செய்வதற்கு வழிகாட்டவில்லை எனின் அவர் சேர்த்து வைத்த சொத்தாலும் கற்ற கல்வியாலும் எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை. எனவே ஒரு தலைமுறை சிறப்பாக வாழ்வதற்கு தர்ம காரியங்களில் ஈடுபட வேண்டும். ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்திற்கு. கல்விக்கு. வைத்திய தேவைக்கு உதவுவதன் மூலமாகவும் ஆலய திருப்பணிக்கு பங்களிப்புச் செய்வதன் மூலமும் ஒருவர் தன்னுடைய தலைமுறையை சிறப்பாக வாழ வைக்க முடியும். "ஏழையின் சிரிப்பில்தான் இறைவனைக் காணலாம்" என்ற ஜதார்த்தத்தை தெரிவித்துக் கொண்டு எனக்கு இச் சந்தர்ப்பத்தை வழங்கியமைக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



### சிற்பாசாரியாரின் உள்ளத்திலிருந்து

இலங்கைத் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள லைடன் தீவில் அமைந்துள்ள ஒரு கிராமம் நாரந்தனை. அக்கிராமத்தின் வடக்கே பண்டாரபுலம் எனும் பதியிலே தான் தோன்றியாக எழுந்தருளி அருளாட்சி செய்கின்ற தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாளுக்கு பஞ்சதல இராஜகோபுரம் .மணிமண்டபம். மணிக்கோபுரம் என்பன அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுவது பெருமகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

அம்பாளின் இராஜகோபுரத்தை அலங்கரிக்குமுகமாகவும் அம்பிகையின் பல்வேறுவடிவங்கள் குறிக்கும் தத்துவங்னையும் சிற்பங்களாக வடிவமைக்க எனக்கு கிடைத்தமை அம்பிகையின் அருட்கடாட்சம் என்றுதான் கூறவேண்டும். பஞ்சதலங்களிலும் வாயிற் காவலர்களாக துவாரபாலகிகளும் அம்மன் விக்கிரகம். பிள்ளையார். முருகன் விக்கிரகங்கள். ஆலய வரலாற்றைக்குறிக்கும் விக்கிரகங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

மணிமண்டபத்தின் உட்புற மேற்பகுதியினை அழகுபடுத்துமுகமாக தாமரைக்கமலம். அன்னப்பறவை. மயில்கமலம் என்பன போன்ற சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை வர்ணங்கள பூசப்பட்டு பார்ப்பவர்களைப் பரவசப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. அம்பிகையின் இராஜகோபுர கட்டுமானப்பணிகளில் என்னையும் சிற்பங்களைச் செதுக்கும் ஒருவனாக ஏற்றுக்காண்ட அம்பாளின் பாதக்கமலங்களை சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன். கும்பாபிஷேகநிக்ழவுகள் சிறப்புற நடைபெறவுள்ளமையை இட்டு பெருமகிழ்ச்சியடைவதுடன் அந்நிகழ்வுகளையிட்டு வெளியிடப்பட இருக்கும் கும்பாபிஷேக சிறப்புமலருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அனைவருக்கும் மனப்பூர்வமான பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பா.கமலநாதன்**
**சிற்பாசாரியார்**
**ஜயனார் கோவிலடி சண்டிலிப்பாய்**

சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்
பிரபல கட்டடப் பொருட்கள் விற்பனையாளர்கள்
இல.55.57, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி இல. 021 222 2901 / 021 222 5008
பெக்ஸ் : 021 222 4869

தரன் ரேடெஸ்
General Hardware Merchants
132, Stanley Road, Jaffna.
021 222 2664, 021 222 8520 Fax: 021 222 7184

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் தமிழர்களின் கரிசனையை ஆராய குழு

## புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுடன் பேச்சை ஆரம்பித்த நீதியமைச்சர்

கொழும்பு, ஓக.29

**புலம்பெயர் தமிழர் பிரதிநிதிகள் எழுப்பிய கரிசனைகள் தொடர்பில் தீர்வு காண்பதற்காக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச முன்னாள் பிரதம நீதியரசர் அசோக் டி சில்வா தலைமையில் மூவர் கொண்ட குழுவை நியமித்துள்ளார்.**

புலம்பெயர் தமிழர் அமைப்புக்களுடன் இணைய வழிமுறை மூலம் மேற்கொண்ட பேச்சுக்களின் போது தமிழர் பிரதிநிதிகள் எழுப்பிய கரிசனைகள் தொடர்பில் தீர்வை காண்பதற்காகவே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கனடாவைச் சேர்ந்த நீதி மற்றும் சமத்துவத்துக்கான கனடா அமைப்பினருடன் நீதியமைச்சர் பேச்சு மேற்கொண்டுள்ளார், அவுஸ்திரேலியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் புலம்பெயர் அமைப்புகளுடனும் அமைச்சர் பேச்சு மேற்கொண்டுள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இலங்கையில் குறிப்பிட்ட காலம் தடுத்துவைக்கப்பட்டிருந்த பின்னர் விடுதலை செய்யப்பட்ட ரோய் சமாதானம் என்பவர் தலைமையிலான கனடா அமைப்புடன் நீதியமைச்சர் பேச்சு மேற்கொண்டுள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளை விரைவில் விடுதலை செய்யவேண்டும், வடக்கு - கிழக்கில் தமிழர்கள் துன்புறுத்தப்படுவதற்கு முடிவு காண வேண்டும் என்ற இரண்டு முக்கியமான கோரிக்கைகளை புலம்பெயர் தமிழர் அமைப்புகள் முன்வைத்துள்ளன. சமூகங்களுக்கு இடையிலான நல்லுறவை வலுப்படுத்தவேண்டும் எனவும் புலம்பெயர் தமிழர் அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

புலம்பெயர் சமூகத்துடன் பேச்சு ஆரம்பித்துள்ளதை உறுதி செய்துள்ள நீதியமைச்சர் அவர்களுடைய கரிசனைகளை கவனமாக செவிமடுத்துள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.

இந்தப் பேச்சுகளின் பின்னர் மூவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டது என்றும், அந்தக் குழுவை கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்தேன் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வை காண்பதற்கான பொறுப்பை அடுத்த தலைமுறைக்கு வழங்கக்கூடாது. துயரங்களுக்கு விரைவில் தீர்வை காண்பதற்கான நாட்டை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் நீதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் உள்ள நிலங்களை படையினர் பலவந்தமாக ஆக்கிரமித்துள்ள விடயம் தொடர்பாகவும் புலம்பெயர் தமிழர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். நிலங்களை உரிமையாளர்களிடம் கையளிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளோம், இது தொடரும் நடவடிக்கை என நீதியமைச்சர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## மின்துண்டிப்பு நேரம் குறையும் சாத்தியம்!

கொழும்பு, ஓக. 29



இந்த வாரம் முதல் நாளாந்த மின்துண் டிப்பு காலஅளவு குறைவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன என்று இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளதாவது:-

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் முதலாம் மின்பிறப்பாக்கி திடீரென செயலிழந்த நிலையில் அதன் சீரமைப்பு பணி காரணமாக கடந்த 15ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் 3 மணித்தியால மின்தடை நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் சீரமைப்பு பணிகள் நிறைவடைந்து நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் முதலாம் மின்பிறப்பாக்கி மீள இயக்கப்பட்டு நேற்றுமுன்தினம் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 300 மெகாவாட்ஸ் மின்சாரம், தேசியக் கட்டமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

அதன்படி மின்துண்டிப்பு கால அளவில் திருத்தம் செய்து விரைவில் பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவுக்கு இலங்கை மின்சாரசபை அறியப்படுத்தும் - என்றார். (ச-இ)

## வெளிநாட்டு நிறுவனங்களின் வசம் விரைவில் எரிபொருள் நிலையங்கள்

*எரிசக்தி அமைச்சு திட்டம்*

கொழும்பு, ஓக. 29



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான சுமார் 500 முதல் 700 எரிபொருள் நிரப்பு நிலையங்களை விரைவில் தனியார்துறைக்கு வழங்க அரசாங்கம் தயாராகி வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

அடுத்த நான்கு மாதங்களுக்கான எரிபொருள் கொள்வனவுக்கு 2 பில்லியன் அமெரிக்க டொலர் தேவை. அதை நிவர்த்திக்கும் முகமாக எரிபொருள் நிலையங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

வெளிநாட்டு நிறுவனங்களில் சீனாவின் சினோபெக் குழுமம், பிரிட்டிஷ் ஷெல் நிறுவனம் மற்றும் இந்திய நிறுவனங்களின் 27 முன்மொழிவுகள் இலங்கை கிடைத்துள்ளன.

இந்த எரிபொருள் நிலையங்களை வழங்குவதற்கான 4 முன்மொழிவுகளை சுருக்கப்பட்டிலுக்குள் கொண்டுவர எரிசக்தி அமைச்சு திட்டமிட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## பிறப்பு வீதத்தில் வீழ்ச்சி

கொழும்பு, ஓக.29



இலங்கையில் பிறப்பு வீதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று குடிசன மதிப்பீட்டு புள்ளிவிவரவியல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

2020ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது 2021ஆம் ஆண்டில் குழந்தைகள் பிறப்பு 16 ஆயிரத்து 858 ஆல் குறைவடைந்துள்ளது. 2020 ஆம் ஆண்டில் 3 லட்சத்து 17 ஆயிரத்து 7 பிறப்புக்கள் பதிவாகியிருந்தன. 2021 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 2 லட்சத்து 84 ஆயிரத்து 848 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.

2021 ஆம் ஆண்டில் பிறப்பு வீதம் 12.9 வீதமாகக் குறைவடைந்துள்ளது. பெண் குழந்தைகளை விடவும் ஆண் குழந்தைகள் அதிகளவில் பிறந்துள்ளன என்றுதெரிவிக்கப்படுகின்றது.

2021ஆம் ஆண்டில் கொரோனாப் பெருந்தொற்று காரணமாக இவ்வாறு குழந்தை பிறப்புக்கள் குறைவடைந்துள்ளன என்று குடிசன மதிப்பீட்டு புள்ளி விவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-இ)

## அலங்காரத் திருவிழா

கிளிநொச்சி, ஓக. 29

பளை, இயக்கச்சி - மல்வில் கிருஷ்ணன் கோயில் அலங்காரத் திருவிழா நாளைமறுதினம் புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ள திருவிழாவில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பைத் திருவிழாவும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும், 10 ஆம் திகதி சனிக்கிழமை சமுத்திர தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என்று ஆலய தர்மகர்த்தாசபை அறிவித்துள்ளது. (எ-14,9)

## கும்பாபிஷேகம்

சங்குவேலி ஸ்ரீ சிவஞான பிள்ளையார் ஆலய நூதன பஞ்சதல இராஜகோபுர பஞ்சகுண்ட மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8 மணி முதல் 9 மணிவரை நடைபெறவுள்ளது.

இன்று திங்கட்கிழமை புண்ணியாகவாசனம், அனுக்ஞை, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், கிராமசாந்தி, வாஸ்து சாந்தி என்பனவும், நாளை செவ்வாய்க்கிழமை யாகபூசை, அக்னிபூசை, கோபூசை, ஸ்தாலி பாகம், பாவனா அபிஷேகம், மஹா திரவிய ஹோமம் என்பனவும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## இறக்குமதித் தடையால் தொழில்துறை பாதிப்பு!

கொழும்பு, ஓக.29

பல்வேறு காரணிகளால் மோசமான நெருக்கடியை எதிர்கொண்டுள்ள தேசிய தொழிற்றுறையை முழுமையாக இல்லாதொழிக்கும் வகையில் 300க்கும் மேற்பட்ட பொருள்களின் இறக்குமதி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. அரசாங்கம் பொறுப்புடன் செயற்படவேண்டும். இறக்குமதியைத் தவிர்ப்பது வெளிநாட்டு கையிருப்புப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது.

இவ்வாறு சிறிலங்கா ஐக்கிய வர்த்தகர் சங்கத்தின் தலைவர் டானியா அபேசுந்தர தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வெளிநாட்டுக் கையிருப்புப் பற்றாக்குறை காரணமாக கடந்த 24ஆம் திகதி முதல் நடைமுறைக்குவரும் வகையில் 300க்கும் மேற்பட்ட பொருள்களின் இறக்குமதி தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் இந்தத் தீர்மானத்தால் ஆடைத் தொழிற்றுறை பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

ஆடைத் தொழிற்றுறையில் பல மில்லியன் கணக்கானோர் சேவையாற்றுகிறார்கள். மின்கட்டணம் மற்றும் சேவை கட்டண அதிகரிப்புக்கு மத்தியில் தொழிற்றுறையை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது.

பொருள்கள் இறக்குமதி மீது தடை விதிப்பதால் வெளிநாட்டுக் கையிருப்புப் பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு காணமுடியாது. டொலர் உள்வருகைக்கான யோசனைகளை அரசாங்கத்திடம் பலமுறை முன்வைத்தோம்.

எமது கருத்துகளுக்கு அரசாங்கம் மதிப்பளிக்கவில்லை. பொருள்கள் இறக்குமதி மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளோம் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீரக் காணிக்கை



பிறப்பு 14 . 09 . 1953

இறப்பு 28 . 08 . 2022

எமது ஆலய வாழ்நாள் பிரதம குரு

சர்வேஸ்வரக்குருக்கள்

## சிவஸ்ரீ சண்முகானந்தக் குருக்கள்

அமைதியான புன்சிரிப்பும் ஆழ்ந்த சிந்தனையும் கொண்டு
கனிவு மொழி பேசும் கள்ளமில்லா வெள்ளை மனமும்
புன்னகை பூத்த பொன்முகமும் மறைந்ததேனோ?
கண்களெல்லாம் கடலாய்ப் பொங்க
கலங்க விட்டு எங்கு சென்றீர்கள்?
அமைதியாய் மரணத் திரையினிலே
மௌனமாய் மறைந்ததேனோ?

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அனைத்து உள்ளங்களிற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய சூராவத்தை முத்துமாரி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்

சூராவத்தை முத்துமாரி அம்மன் ஆலய
பரிபாலன சபையினர்

(cs.43185) (2-6)

# செப்ரெம்பர் மத்திக்குப் பின்னர் அரிசி 290 ரூபாவாக உயரும்!

## ஆலை உரிமையாளர்கள் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 29

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் மத்திய பகுதிக்குப் பின்னர் ஒரு கிலோ அரிசியை 290 ரூபாவுக்கு விற்பனை செய்ய வேண்டியிருக்கும் என்று ஆலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது ஒரு கிலோ நெல் 140 ரூபா தொடக்கம் 150 ரூபா வரையான விலைக்குக் கொள்வனவு செய்ய வேண்டியிருப்பதால், ஒரு கிலோ நெல்லின் விலையை விட இரு மடங்கு விலைக்கு அரிசியை விற்பனைசெய்ய வேண்டியுள்ளது. மின்சாரக் கட்டணம், போக்கு வரத்துக் கட்டணம் என்பன அதிகரிப்பதால் அரிசியின் விலையை உயர்த்த வேண்டிய நிலை ஏற்படும். நெல் சந்தைப்படுத்தல் சபை, நெல்லை அதிக விலைக்கு கொள்வனவு செய்வதாலேயே நெல்லின் விலையை அதிகரிக்க வேண்டியுள்ளது. தற்போது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலையில் அரிசி விற்பனை செய்யப்பட்டாலும், செப்ரெம்பர் 18ஆம் திகதிக்குப் பின்னர் அரிசியின் விலையை அதிகரிக்க முடிவு செய்ய வேண்டும்- என்றனர். (ம-14,இ)

# முட்டை, கோழிக்குஞ்சுகளுக்கு வரும் நாள்களில் தட்டுப்பாடு!

கொழும்பு, ஓக. 29

எதிர்வரும் நாள்களில் முட்டை மற்றும் கோழிக்குஞ்சு ஆகியவற்றுக்கு சந்தையில் தட்டுப்பாடு நிலவும் என முட்டை மற்றும் கோழி உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ள னர்.

கோழிக்குஞ்சுகளை இறக்குமதி செய்வதற்கான நாணயக் கடிதங்களை விடுவிப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கல் மற்றும் கோழித் தீவனங்களின் விலை உயர்வு ஆகியவை காரணமாக இந்தத் தட்டுப்பாடு ஏற்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

முட்டைக்கான உச்சபட்ச சில்லறை விலையை அறிவித்து நுகர்வோர் அதிகாரசபை அண்மையில் வர்த்தமானி வெளியிட்டது.

இதன்காரணமாகப் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள கோழி உற்பத்தியாளர்கள் குறித்த தொழில் துறையில் இருந்து விலகுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் இதுகுறித்து வர்த்தக அமைச்சருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது என விவ சாய அமைச்சர் மஹிந்த அமர வீர தெரிவித்துள்ளார். (ச-இ)

# மரண அறிவித்தல்



தோற்றம் 09 . 08 . 1938

மறைவு 20 . 08 . 2022

## திரு.சண்முகம் முத்துலிங்கம்

யாழ். மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் முத்துலிங்கம் அவர்கள் 20-08-2022 சனிக்கிழமை அன்று Toronto வில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் செல்லம் தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற பசுபதி, தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,நாகேஸ்வரி அவர்களின் அன்புக்கணவரும்,காலஞ்சென்ற கணேசலிங்கம், மலர்விழி, கயல்விழி, லிங்கேஸ்வரன்(லிங்கம்), கவிதா, காலஞ்சென்ற குமுதா, வனிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும்,இரவீந்திரராஜா,ஸ்ரீகரன், வாசுகி, ஸ்ரீசேகர், கெங்காகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சிவஞானம் அவர்களின் ஆருயிர் சகோதரரும்,சந்திரராணி, லோகநாதன், பரமநாயகம், காலஞ்சென்ற சந்திரேஸ்வரி, ஜெயராயேஸ்வரி, வரதலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், காயத்திரி-பிரசன்னா, கார்வகி, செந்தூரன்-நேருயா, ஆனந்தராஜ், பகீரதன், ஆகாஷ், அஜந்தி, மணிகண்டன், பிரவீன், நிசாந், துஷாரா, ஆகீசன் ஆகியோரின் பாசமிகு பேரனும்,தர்சினி, கல்யாணி, பிங்கலன்(றீகன்), கலையரசி ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

கிரியை : Lotus Funeral and Cremation Centre Inc. 121 City View Dr, Etobicoke, ON M9W 5A8, Canada
Monday, 29 Aug 2022 10:00 AM - 1:00 PM (கனடா நேரம்)

கடைசி பயணம் ஆரம்பம்: https:///www.youtube.com/watch?v=cHrUTQMJQQ0

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: லிங்கம் – மகன் +14168236852
கல்யாணி – பெறாமகள் +94774254841

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



பிறப்பு 09 . 08 . 1932

இறப்பு 26 . 08 . 2022

## தம்பு செலஸ்ரீனம்மா (மணி)

யாழ்ப்பாணம் குருசோ வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு செலஸ்ரீனம்மா (மணி) கடந்த (26.08.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அண்ணாவி சின்னத்தம்பி - பொன்னு ஆகியோரின் மகளும், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் தம்புவின் பாசமிகு மனைவியும், காலஞ் சென்றவர்களான இராசேந்திரம், கபிரியேல் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவரனா வில்பிறட் மகேந்திரன் மற்றும் றாஜேஸ்வரி பொன்றோஸ், அருள்நேசன் அழகு, மகேஸ்வரி ஜோகராணி, வலன்ரைன் பாலா, சிறிமாவதி, யோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரஞ்சனா, காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் வசந்தி, அமலதாஸ், கேமா யூலியற், அகிலன் ஜெபரஞ்சன் ஆகியோரின் மாமியாரும், யூலி, டறியஸ், றிவ்யா, குளோறியா, தமயந்தி, அனிற்றா, பிறைமோ, சிம்றித், ஜெனோ, ஜெறோம் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.08.2022) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077 613 5393
076 726 5338

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 01 - 05 - 1929



இறப்பு 26 - 08 - 2022

## திருமதி பத்மலோசனி மாசிலாமணி (லோசனா)

புங்கன்குளத்தை பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மலோசனி மாசிலாமணி அவர்கள் (26.08.2022) வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேலு, லட்சுமி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற திரு.V.C மாசிலாமணியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பத்மநாதனின் அருமைச் சகோதரியும் ஹிமாராணி (ஓய்வுபெற்ற ISA), உமாநீலவேணி (ஓய்வுபெற்ற ஆசிரியை வேம்படி - லண்டன்) காலஞ்சென்ற ரகுந்திரநாத், குமுதினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், மருத்துவர் திருவாரூரன், காலஞ்சென்ற ஜயந்தன் அவர்களின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் திங்கட்கிழமை 29.08.2022 அன்று காலை 8.30 மணி தொடக்கம் மகிந்த மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 4.00 மணியளவில் கொழும்பில் இறுதிக்கிரியைகள் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 6 1/5 ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.

011 236 5015

தகவல்:
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவு நாள்

பிறப்பு 02 . 10 . 1930



இறப்பு 08 . 09 . 2021

## அமரர் திருமதி. கந்தையா தங்கம்மா (தங்கேஸ்வரி ரீச்சர்)

(இளைப்பாறிய ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி)

"நன்று பணிகள் பல புரிந்தார்
கன்றுகள் அனைவருக்கும் ஆறுதல் தந்தார்
என்றும் நீள நினைந்திடுவோம்"

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

29.08.2022 அன்று 11.00 மணியளவில் சுதுமலை வடக்கில் உள்ள "தங்க மனை" இல்லத்தில் ஆத்மா சாந்தி பிரார்த்தனையும் பண்ணிசை அரங்கும் நடைபெறும்.

"சிவகாமி வாசா",
இணுவில் கிழக்கு, இணுவில்.

தகவல்: குடும்பத்தினர்.
"தங்க மனை",
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

# மரண அறிவித்தல்

## அமரர் சிவஸ்ரீ. சர்வேஸ்வரக்குருக்கள் ஸ்ரீசண்முகானந்தக்குருக்கள்

சுன்னாகம், மயிலணியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ. சர்வேஸ்வரக்குருக்கள்-ஸ்ரீசண்முகானந்தக்குருக்கள் நேற்று (28.08.2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சர்வேஸ்வரக்குருக்கள்-மனோன்மணி அம்மா தம்பதியரின் தவப்புதல்வரும் கோகிலவாணியின் அன்புக் கணவரும் ஜெகதர்சினி, ஸ்ரீஜகஜீவசர்மா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஹரிஹரசர்மா (முன்னேஸ்வரம்), பவித்திரா (ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஹரிஷினி, ஹரிதர்ஷசர்மா, ஸ்ரீஆதேஷ்சர்மா, ஸ்ரீஆர்த்விக்சர்மா ஆகியோரின் பேரன்பு மிக்க பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.08.2022) ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மயிலணி,
சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்
021 224 0587
077 739 1020

# பிரிட்டன் மருத்துவமனைகளுக்கு இலங்கையின் தாதியர்கள்!

கொழும்பு, ஓக. 29

பிரிட்டனிலுள்ள மருத்துவமனைகளில் பணிபுரிய, இலங்கையிலிருந்து பயிற்சி பெற்ற தாதியர்கள் அனுப்பப்படுகின்றனர். பிரிட்டனிலுள்ள மருத்துவமனைகளில் கடமையாற்றவுள்ள பயிற்சி பெற்ற இலங்கையைச் சேர்ந்த தாதியர் குழுவுக்கான நியமனக் கடிதங்களை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நேற்று வழங்கினார். லண்டனில் உள்ள இலங்கை தூதரகத்தின் அனுசரணையுடன், வெலிசரவில் உள்ள சர்வதேச சுகாதார விஞ்ஞான நிறுவனம் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற தாதியர்களின் முதல் தொகுதியினருக்கு இந்த நியமனம் நேற்று வழங்கப் பட்டுள்ளது.

(அ-ஒ-இ)

# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல் வலிகாமம் வடக்கு பிரதேசசபை உப அலுவலகம் - தெல்லிப்பளை

விண்ணப்பதாரர் - திரு.ஆறுமுகசாமி கேதீஸ்வரன்
முகவரி - துர்க்காபுரம், மல்லாகம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேச செயலகம், தெல்லிப்பளை கிராமசேவகர் பிரிவு J/229, வலிகாமம் வடக்கு பிரதேசசபை தெல்லிப்பளை உப அலுவலகத்திற்குட்பட்ட ஆதனப் பதிவேட்டில் வட்டாரம் 13, சோடாக்கம்பனி வீதி, ஆதன இலக்கம் 44/11, V ஆறுமுகசாமி என்னும் பெயரில் பதிவில் உள்ளது.

குறித்த ஆதனமானது வீரவாகு ஆறுமுகசாமிக்கு சொந்தமாயிருந்து 2018.06.19 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் நா.பார்த்திபன் அவர்கள் முகதாவில் 265 ஆம் இலக்க உறுதி மூலம் வீரவாகு மகன் ஆறுமுகசாமி கேதீஸ்வரன் என்பவருக்கு வெளிப்படுத்தி வந்தடைந் துள்ளது.

**ஆதன விபரம் - 1**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்றும் தெல்லிப்பளை கிழக்கு இறையும் "தோடப்பை" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் மு.ஆறுமுகம் அவர்கள் வரைந்த 4105 இலக்க 01.06.2018ம் திகதிய வரை படத்தின் படி துண்டு 01 ஆக காட்டப் பட்ட நிலப்பரப்பு 01 குளி 11.49 இதன் எல்லைகள்.

கிழக்கு - மகாலிங்கம் தேவயானியின் ஆதனமும், ராமநாயர் பாலசுப்பிரமணி யம் மனைவி ஜெயகௌரியம்மாவின் ஆதனமும்.
வடக்கு - மகாலிங்கம் தேவயானியின் ஆதனமும்
மேற்கு - குணசீலன் ரஜீவன் மனைவி ஜெயவதனாவின் ஆதனமும்
தெற்கு - பாதை இவ்வெல்லைபடி இதனடாங்கலும்.

ஆறுமுகசாமி கேதீஸ்வரன் எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 31 நாட்களுக் குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்கு மாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில விண்ணப் பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள் கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை.**
**29.08.2022**

# மின்வெட்டு குறைப்பு

கொழும்பு, ஓக. 29

மின்வெட்டு நேரத்தை ஒரு மணித்தியாலத் துக்கு நேற்று மட்டுப்படுத்தியது இலங்கை மின்சாரசபை. மின்தேவை குறைந்ததாலும், நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் மீண்டும் தொடங்கப்படுவதாலும் இந்த முடிவு எடுக்கப் பட்டுள்ளது. இதேவேளை- இந்த வாரம் எவ்வாறு மின் வெட்டு மேற் கொள்ளப்படும் என்பது தொடர் பில் கிடைக்கப்பெறும் வளங்களின் அடிப்படையில் பின்னர் அறிவிக் கப்படும் எனவும் பொதுப் பயன்பா டுகள் ஆணைக் குழு தெரிவித் துள்ளது.

(அ-ஒ.இ)
(முன்னர் வந்த செய்தி உள்ளே)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## குமாரு பரமேஸ்வரி

தோற்றம் 06.01.1936 — மறைவு 08.09.2021

குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து
அன்போடும் பண்போடும் பழகி
எல்லோர் மனங்களிலும் இடம்பிடித்து
இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட
உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

கந்தரோடை,
சுன்னாகம்.
077 151 0306

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(ப.46197)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவாரஇடைவெளியில்

## சகோதரனும், சகோதரியும் யானைதாக்கி உயிரிழப்பு

கொழும்பு, ஒக. 29

ஹசலக்க, கங்கேயாய, பஹேஎல பகுதியில் காட்டுயானை தாக்கியதில் 16 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் நேற்றுக்காலை உயிரிழந்துள்ளார். இவர், 14 நாள்களுக்கு முன்னர் யானை தாக்கி உயிரிழந்த தனது சகோதரனின் ஆத்ம சாந்தி வழிபாட்டுக்காக பெற்றோருடன் விகாரைக்குச் சென்று கொண்டிருந்த போதே, யானையின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

பஹேஎல என்பது காட்டு யானைகளின் தாக்குதல்களை அடிக்கடி எதிர்கொள்ளும் ஒரு கிராமமாகும். விலங்குகள் பயிர்களை சேதப்படுத்துவதோடு கிராம மக்களின் உயிருக்கும் அச்சுறுத்தலாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

உயிரிழந்தமாணவி இன்று ஆரம்பமாகவுள்ள சாதாரண தரப் பரீட்சையின் செயன்முறை பரீட்சைக்கு தயாராகி வந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-ஒ-இ)

### சிங்களவர்கள்...

கடந்த காலங்களில் ஜெனிவாவில் சிறிலங்கா அரசாங்கத்துக்கு எதிராக தமிழ் மக்களே போராட்டம் நடத்துவது வழமை. அந்தக் காலப் பகுதிகளில் சிங்கள மக்கள், சிறிலங்கா அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்தும், அதன் மனித உரிமை மீறல்களை ஆதரித்தும் போராட்டம் நடத்தி வந்தனர்.

முதல் தடவையாக சிறிலங்கா அரசாங்கத்துக்கு எதிராக ஐரோப்பாவைச் சேர்ந்த சிங்கள மக்கள் ஜெனிவாவில் போராட்டம் நடத்தியுள்ளனர்.

ஊழல்வாதிகள் தற்போதும் அமைச்சரவையில் உள்வாங்கப்பட்டுள்ளனர் என்றும், ஊழல்வாதிகள் ஆளுங் கட்சியில் இன்னமும் உள்ளார்கள் எனவும் அவர்கள் தண்டிக்கப்படாமையைக் கண்டித்தும் இந்தப் போராட்டத்தில் கோஷம் எழுப்பினர்.

போராட்டக்காரர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதைக் கண்டித்தும், கைது செய்யப்பட்ட போராட்டக்காரர்கள் விடுவிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரினர்.

இந்தப் போராட்டத்தில் ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்ற சிங்கள மக்கள் கலந்து கொண்டனர். குறிப்பாக இத்தாலியிலிருந்தே அதிகளவானோர் பங்கேற்றனர். (அ-ஒ-5-22)

### வாழ்வக...

வேம்படி மகளிர் கல்லூரியில் கல்வி பயின்ற மேற்படி மாணவி ஊடகக் கற்கை, இந்து நாகரிகம், வரலாறு ஆகிய பாடங்களில் தோற்றி இந்தச் சாதனையைப் புரிந்துள்ளார்.

வாழ்வகத்திலிருந்து உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மற்றைய மாணவனான ஜெயக்குமார் ராஜ்குமார் 2 சி, எஸ் பெற்றுச் சித்தியடைந்துள்ளார். (அ-ஒ-இ)

### கோதுமை...

பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கோதுமை மாவை இறக்குமதி செய்யும் இரண்டு பிரதான நிறுவனங்களிடமிருந்தும் நாளாந்தத் தேவையில் 25 சதவீதம் மாத்திரமே சந்தைக்கு வெளியிடப்படுவதாக அந்தச்சங்கம் கூறியுள்ளது.

இந்தியா தற்காலிகமாக கோதுமை ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ள நிலையில் அங்கிருந்து இலங்கைக்கு கோதுமை மாவை கொண்டு வரும் வர்த்தகர்கள் மாவின் விலையை 350 ரூபாவாக உயர்த்தியுள்ளனர்.

இந்தச் செயற்பாடு வருந்தத்தக்கது என தெரிவித்த அந்தச்சங்கம், இந்நிலை தொடர்ந்தால் பாணைக் கூட 250 முதல் 300 ரூபாவுக்கு மக்கள் வாங்க வேண்டிய நிலை ஏற்படும் என எச்சரித்துள்ளது. (அ-ஒ-இ)

### எந்தப்...

யாது என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். ஜெனிவா அமர்வு இம்முறை இலங்கைக்கு சவாலாக அமையாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்த நிலையில், பிரதமரும் அதையொத்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

'ஜெனிவாவில் அடுத்தமாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கையின் நிலைப்பாட்டை அரசு சமர்ப்பிக்கும். இந்த மாநாடு இலங்கைக்குச் சவாலாக அமையாது என்றே நாம் கருதுகின்றோம். இலங்கை தொடர்பில் என்ன பிரேரணை வந்தாலும் அதனை அரசு எதிர்கொள்ளத் தயாராகவுள்ளது' - என்றார் தினேஷ் குணவர்த்தன. (அ-ஒ-5-22)

### ஹெரோயின்...

வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



கொக்குவில் கிழக்குப் பகுதியில் ஹெரோயினை விற்பனை செய்ய முயன்ற வேளை யாழ். மாவட்டக் குற்றத்தடுப்பு பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 5 கிராம் 400 மில்லி கிராம் ஹெரோயினும், ஒரு லட்சம் ரூபா பணமும் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஒ-26-125)

### வெளியானது...

பாடங்களுக்கும் தோற்றியிருந்தனர் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

பெறுபேறுகளின் அடிப்படையில் 1 லட்சத்து 71 ஆயிரத்து 497 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

37 பாடசாலை விண்ணப்பதாரர்கள் மற்றும் 12 தனியார் விண்ணப்பதாரர்கள் உட்பட 49 விண்ணப்பதாரர்களின் முடிவுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. (அ-ஒ-இ)

### இலங்கைக்கு...

யுள்ளார் சுயாதீன அணியின் நாடாளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ஸ.

'பிரேரணைகள் மூலம் இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது என்பதைச் சர்வதேச நாடுகள் கவனத்தில்கொள்ள வேண்டும். பிரேரணைகள் இன உறவுக்கு மேலும் குந்தகத்தையே ஏற்படுத்தும். பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழ வேண்டுமெனில் சர்வதேச நாடுகளின் உதவிகளே வேண்டும். இந்நிலையில் இலங்கைக்குப் எதிராகப் புதிய பிரேரணை எதற்கு? ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட எந்தப் பிரேரணையும் செயலுருப் பெற்றதாக வரலாறு இல்லை' - என்றார் அவர். (அ-ஒ-22)

### யாழ். மாநகரசபைக்கு...

மில்லியன் (அமெரிக்க டொலர் 83,432) பணத்தை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளது.

மாநகரசபையின் வைப்பிலிருந்து இந்தப் பணம் விரைவில் ஜப்பான் தூதரகத்துக்கு வழங்கப்படவுள்ளது.

2019 ஆம் ஆண்டு ஜப்பானிய வெளியுறவு அமைச்சகத்தின் இலாப நோக்கற்ற பிரிவான ஜப்பானிய இராஜதந்திரத்தை மேம்படுத்துவதற்கான சங்கம், பயன்படுத்தப்பட்ட 4 கழிவகற்றல் மற்றும் மறுசுழற்சி வாகனங்களை யாழ். மாநகரசபைக்கு வழங்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

நான்கு வாகனங்களை இலங்கைக்கு கொண்டு வர, சுங்க அனுமதி மற்றும் உள்ளூர் போக்குவரத்து தொடர்பான செலவுகளுக்காக 14.3 மில்லியன் ரூபாவை ஜப்பானிய தூதரகம், யாழ். மாநகரசபையின் வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டது.

இருப்பினும் வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வாகனங்களைக் கொண்டு வருவதற்கு திறைசேரி ஊடாக வழங்கப்பட வேண்டிய அனுமதி கிடைக்கப்பெறவில்லை. யாழ். மாநகர சபையின் முன்னைய மேயர் ஆனல்ட் இந்த விடயத்தில் நேரடியாக தலையிட்டு திறைசேரியுடன் பேச்சு நடத்தியிருந்தார். அத்துடன் ஜப்பானியத் தூதரகமும் சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. ஆனாலும், திறைசேரியால் இறுதி வரையில் அனுமதி வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் மேற்படி திட்டம் 3 ஆண்டுகளுக்கு மேலாக தாமதப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, அந்த நிதியை மீளப்பெறுவதாக ஜப்பான் தூதரகம், யாழ். மாநகர சபைக்கு அறிவித்துள்ளது. (அ-ஒ-இ)

### உருப்படியாக...

தீர்மானங்களில் கூறப்பட்டவற்றை உருப்படியாக நடைமுறைப்படுத்தப்படாத இலங்கை அரசாங்கத்துக்கு மீண்டும் கால அவகாசம் வழங்கும் பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத் தொடர் அடுத்த மாதம் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

பிரிட்டன் தலைமையில் புதிய பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது. இந்தப் பிரேரணைக்கு அமெரிக்கா, கனடா, ஜேர்மன், வடக்கு மசிடோனியா, மலாவி, மொன்றிநீக்ரோ ஆகிய நாடுகள் இணை அனுசரணை வழங்கவுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத் தொடரில் இலங்கையின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி நிறைவேற்றப்பட்ட 46/1 பிரேரணை இந்தக் கூட்டத் தொடருடன் காலாவதியாகவுள்ள நிலையில் புதிய பிரேரணை ஒன்றை மீண்டும் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு இணை அனுசரணை நாடுகள் தீர்மானித்துள்ளன.

இந்தப் பிரேரணையானது, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 2012ஆம் ஆண்டிலிருந்து நிறைவேற்றப்பட்டு வரும் பிரேரணைகளின் உள்ளடக்கத்தைக் கொண்டிருக்கவுள்ளதோடு விசேடமாக 46/1 பிரேரணையின் உள்ளடக்கத்தில் குறிப்பிடப்பட்ட சில முக்கியமான விடயங்கள் காலநீடிப்புடன் உள்ளீர்க்கப்படவுள்ளன.

குறிப்பாக, இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பான சாட்சியங்களைத் திரட்டுவதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ள 8 அங்கத்தவர்களைக் கொண்ட பொறிமுறையானது புதிய பிரேரணையிலும் உள்வாங்கப்படவுள்ளதோடு அதற்கான நிதி மற்றும் வினைத்திறனான செயற்பாடுகள் பற்றியும் குறிப்பிடப்படவுள்ளது.

அதேநேரம், இலங்கையில் அண்மையில் நடைபெற்ற மக்கள் எழுச்சிப் போராட்டத்துக்கு எதிரான அடக்குமுறைகள் பற்றிய விடயங்களும் உள்வாங்கப்படவுள்ளதோடு அவசரகால நிலைமை மீண்டும் பிரகடனப்படுத்தப்பட்டமை தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக புதிய சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும், அதுவரையில் அந்தத் தடைச் சட்டத்தின் கீழ் எவரையும் கைது செய்வதில்லை என்றும், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வாக்குறுதி அளிக்கப்பட்ட நிலையில் தற்போது அதே சட்டத்தைப் பயன்படுத்தி கைதுகள் இடம்பெறுவது தொடர்பாகவும் விசேட கரிசனை கொள்ளப்படவுள்ளது.

மேலும், தமிழ் மக்களுக்கான பொறுப்புக்கூறல் விடயத்தில் எந்தவிதமான செயற்பாடுகளும் முன்னேற்றகரமானதாக இடம்பெறவில்லை என்பதோடு நீதியைக் கோரும் பயணத்தில் தொடரும் போராட்டங்கள் தொடர்பிலும் சுட்டிக்காட்டப்படவுள்ளது.

அத்துடன், தமிழ் மக்களுக்கான நிரந்தரமான அரசியல் தீர்வு பற்றிய விடயமும் புதிய பிரேரணையில் உள்வாங்கப்படவுள்ளதோடு, அதனை நடைமுறைச் சாத்தியமாக்குவது பற்றி வலியுறுத்தலும் செய்யப்படவுள்ளது.

இதனை விடவும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை ஆணைக்குழு அமைக்கப்பட்டாலும் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாமையால் அதன் பின்னணி குறித்த ஆய்வொன்றை மேற்கொள்வதற்கான பரிந்துரை செய்யப்படுவதற்கும் சாத்தியமான நிலைமைகள் காணப்படுகின்றன. (அ-ஒ-5)

### துர்க்கை அம்மன்...

ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

அம்மனுக்கு காலை விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று வசந்த மண்டபத்திலே விநாயகப்பெருமான் மற்றும் துர்க்கை அம்பாள், முருகப் பெருமான் மற்றும் சண்டேஸ்வர மூர்த்தி ஆகியோருக்கு சிறப்பு பூசைகள் நடைபெற்று, மங்கல வாத்தியங்கள் முழங்க பிராமண ஆச்சாரியரின் மந்திர உச்சாடனங்களுடன் கொழத்தம்ப பூசை நடைபெற்று கொடியேற்றத் திருவிழா சிறப்பாக நடைபெற்றது.

அதன்பின்னர் பக்தர்கள் புடை சூழ விநாயகப்பெருமான் மற்றும் துர்க்கை அம்பாள், முருகப்பெருமான் மற்றும் சண்டேஸ்வர மூர்த்தி ஆகியோர் உள் வீதி வலம் வந்தனர்.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் துர்க்கை அம்பாளின் கொடியேற்றத்திருவிழாவில் பக்திபூர்வமாகக் கலந்து கொண்டிருந்தனர். (அ-ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான வீதியில் பிரசித்திபெற்ற மண்கும்பான் வீரகத்தி பிள்ளையார் கோயில் அருகாமையில் 33 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- சாட்டி கடற்கரைக்கு செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ளது.
- யாழ். நகரிலிருந்து 8 KM தூரத்தில் உள்ளது.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்.
- வீடுகள் அமைப்பதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும், திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

**தரகர் தேவையில்லை.**

தொடர்பு:- ஜெயம்

**077 8147 389**
**077 2417 589**

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

## af பிரெஞ்சு மொழி



- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).

021 222 8093 17, Kandy Road, Jaffna

## பணியாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் முன்னணி நகை வியாபார காட்சி அறைக்கு கணினி அறிவுடைய நகை விற்பனையாளர் (ஆண் / பெண்) இருபாலாரும் தேவை. வெளிமாவட்ட ஆண் பணியாளர் தங்கி நின்று கடமை புரியலாம் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

சுயவிபரக்கோவையுடன் மு.ப 9.00 - 11.00 மணி வரை நேரில் வரவும்

**சந்தோஷ் ஜுவலறிஸ்**
**இல.97 A, 99V மின்சார நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**நல்லூர் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள இனிப்புத் தொழிற்சாலைக்கு வேலைக்கு பெண்கள் தேவை.**

மேலதிக தொடர்புக்கு: 077 969 3210

## ENGLISH CLASSES

Gr 1 to O/L
Grammer with Syllabus
வீடுவந்து கற்பிக்கப்படும்.

077 331 4608

## வேலையாள்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் புடைவைக் கடைக்கு ஆண், பெண் வேலையாள்கள் தேவை. சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது. வேலை தெரிந்தவர்கள், பழக விரும்புபவர்கள் .இருவரும் தொடர்புகொள்ளவும்

077 172 3554

## மணமகள் தேவை

லண்டனை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவருக்கு 26 - 31 வயதுக் இடைப்பட்ட செவ்வாய்க் குற்றம் அற்ற ஆங்கில அறிவுடன் பட்டப்படிப்பு முடித்த பெண் பிள்ளையை எதிர்பார்கின்றோம்.

(Viber - Whatsapp) 0044 7902605676

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 168 பரப்புக் காணி (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலை யில்.
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 1/2 KM தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 1/2 KM தூரம்
- புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காப்பெற் வீதியில் இருந்து இரண்டாவது காணி .
- 775 இலக்க வழி பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம். விவசாயம் செய்வதற்கும், வீடுகள் அமைப்பதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் (1 நிலபரப்பு) விலை இரண்டு இலட்சம் (200,000) மட்டும்.

தொடர்பு: **077 6585 999**
**076 4385 814**
**077 8748 135**

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 51 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.

- நான்கு பரப்பாகவும், இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலை யில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல் லும் பிரதான வீதி (காப்பெற் வீதி) முகப்புடன்.
- 784 இலக்க பாதை போக்கு வரத்து பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- பொன்னாலை ரவுண்டப் போட் சந்தியிலிருந்து 1 KM தூரத்தில்
- வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி (Jaffna College) இருந்து 1 KM தூரத்தில்.
- ஒரு பரப்பின் (நிலபர்ப்பு) விலை இரண்டு இலட்சம் **200,000/=** மட்டும்.

தொடர்பு:
**077 911 6983**
**077 148 8348**

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 12 பரப்பு (நிலபரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப் பட்ட நிலையில்.
- கைதடி சந்தியிலிருந்து 750 M தூத்தில்
- A09 வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி.

தொடர்பு:
**076 7558 606**
**077 259 0391**

(CS 20462) (1/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org